|| श्रीः ||

# || श्रीकामकोटिप्रदीपः ||

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மலர் 13 குரோதி ஷூ வைகாசி - ஆனி மீ ஜுன் 2024 இதழ் 6



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் சார்பில் வெளியிடுவோர் :
ஸ்ரீ காமகோடி கோஶஸ்தானம்



# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

**வைகாசி - ஆனி 2024**

**மலர் 13 ஜூன் 2024 இதழ் 6**

## பொருளடக்கம்






| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 5 |
| தெய்வத்தின் குரல் | 7 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 10 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 13 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| ஸ்ரீஸதாசிவ ப்ரம்மேந்திரரின் கீர்த்தனைகள் | 15 |
| ராஜ தரங்கிணி | 16 |
| முகாம் நிகழ்ச்சிகள் | 18 |
| ஆனி மாத விசேஷ தினங்கள் | 21 |
| காஞ்சிபுரத்தில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் | 22 |
| நாம ராமாயணம் | 30 |
| அத்வைத ஆசார்ய பரம்பரை | 32 |
| சாணக்ய ஸுபாஷிதம் | 34 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி | 36 |
| கடவுள் வழிபாடு ஏன் ? | 38 |
| ஆழ்வார்கள் சரித்திரம் | 42 |
| வேதாந்த ஸம்வத்ஸரம் | 44 |
| ஸ்ரீ ராம ஸம்பந்தம் | 45 |
| ப்ரபோத சிந்தாமணி | 47 |
| முக ஸாரம் | 48 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


**நிர்வாகக் குழு**

**ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்**
**டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்**


# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


**கௌரவ தலைமை ஆசிரியர் :**
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

**ஆசிரியர் குழு :**

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா



**வெளியிடுவோர் :**
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

**அலுவலக முகவரி :**
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

**மின் அஞ்சல் :**
kamakotipradeepam@gmail.com


**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை
# प्रार्थना

*‘ மிக்கப் புகழ் உள்ள இந்த்ரன் எங்கள் நலத்தைக் காப்பானாக. அனைத்தையும் அறியும் பூஷா எங்கள் நலத்தைக் காப்பானாக. நிந்தையற்ற ஆயுதங்களுள்ள தார்க்ஷியன் எங்கள் நலத்தைக் காப்பானாக. ப்ருசினியின் புதல்வர்கள் மருத்துக்கள். அழகாய் அசைபவர்கள், வெள்ளிப்புள்ளிகளுள்ள குதிரைகளில் வருபவர்கள். சூர்யனைப் போல் ப்ரகாசிப்பவர்கள். வேள்விகளில் தோன்றுபவர்கள். அவர்கள் எங்கள் பாலனத்துக்கு வருக.*

*தேவர்களே! எங்கள் செவிகளால் மங்கலத்தைக் கேட்போமாக. போற்றத் தகுந்தவர்களே கண்களால் மங்கலத்தைக் காண்போமாக. திடமான தேகங்களுடைய நாங்கள் உங்களைத் துதித்து தேவர்களால் அளிக்கப்பட்ட ஆயுளைப் பற்றுவோமாக.*

*தேவர்களே! மனிதனின் வயது நூறு என்பர். எம் புதல்வர்கள் எங்களுடைய தந்தைகளாய் பாலிப்பவர்களாய் ஆகாமலிருக்க நூறு வருடங்களின் நடுவே மூப்பை அளித்து இடைப்படுத்தாதீர்கள்.’’*

*ரிக் வேதம் 1-89*

*மறையுடையாய் தோலுடையனாய் வார் சடைமேல் வளரும்*
*பிறையெளடையாய் பிஞ்சகனே என்று உன்னைப் பேசின் அல்லால்*
*குறையெளடையாய் குற்றம் ஓராய் கொள்கையினால் உயர்ந்த*
*நிறையுடையார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே.*

*நெடுங்களம் மேவிய சிவனே ! வேதங்களை உடமையாகக் கொண்டவனே தோலாடை உடுத்தியவனே, நீண்ட சடை மேல் பிறை சூடியவனே, தலைக்கோலம் உடையவனே, குறை உடையவர்களின் குற்றத்தை மனதில் கொள்ளாத நீ மனத்தினால் உன்னை அல்லால் வேறு தெய்வத்தை எண்ணாத உன் அடியவர்களின் இடர்களை நீக்கி அருள்வாயாக.*

*கனைத்தெழுந்த வெண்திரை சொழ்கடல் இடை நஞ்சு தன்னை*
*தினைத்தனையா மிடற்றில் வைத்த திருந்திய தேவ! நின்னை*
*மனத்து அகத்தோர் பாடல் ஆடல் பேணி இராப்பகலும்*
*நினைத்து எழுவார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே*

*திரு நெடுங்களம் மேவிய இறைவனே ஆரவாரித்து எழுந்த வெண் அலைகளால் சூழப்பட்ட கடல் நஞ்சினை தினையளவு செய்து உண்டு கண்டத்தே நிறுத்திய மகா தேவனே உன்னை மனத்தில் நிறுத்தி ஆடல் பாடல் பேணி இரவும் பகலும் நின்னையே நினைந்து எழும் அடியவர்கள் இடர்களை நீக்குவாயாக.*

**வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்**

# VEDA RAKSHANA NIDHI TRUST

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/c. No. 602 601205 431

**IFSC Code :** ICIC 0006026

**Bank of Baroda** A/c No. 05320100002089 IFSC CODE barb0chenbs

**Indian Bank** West Mambalam A/c. No. 418622532 IFSC IDIB 000w005

**Canara Bank** West Mambalam A/c No. 0917101041732 IFSC CNRB 0002616

**Indian Bank** Mutt Branch, Kancheepuram **A/c No. 411552514 IFSC IDIB b0005085**

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN No. ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

வேத ரக்ஷண நிதிக்குப் பணம் அனுப்புபவர்கள் விவரத்தை கீழ்கண்ட இ. மெயிலுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

Vrnt e.mail : office@vrnt.org <mailto:office@vrnt.org> Phone : 044 - 24740549

# ஆசிரியர் பக்கம்

*வாசகர்களின் கையில் இந்த இதழ் இருக்கும் போது நம் நாட்டின் ஜனநாயகத் திருவிழா என்னும் தேர்தல் முடிந்து புதிய ப்ரதமர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பார். அதே ப்ரதமராகவும் இருப்பார். 140 கோடி மக்களின் ப்ரதிபலிப்பை இந்த தேர்தல் திறனுடன் செய்துள்ளது. 'ஜனனாயக ப்ரம்மோத்சவம்' என்று கூட பாராட்டலாம். ஆறு, ஏழு கட்டங்களாக இது செவ்வனே செய்யப்பட்டுள்ளது. உலக அரங்கில் தேர்தல் எப்படி நடத்த வேண்டும் என்று மற்ற நாடுகளுக்கு பாடம் எடுத்துள்ளது நம் தேர்தல் முறை. அதை செவ்வனே செய்த தேர்தல் ஆணையத்திற்கு நம் மனமுவந்த பாராட்டுகள்.*

*அரசாட்சி வெறும் இயந்திரமாயில்லாமல் கருணையுடன் அனைத்து மக்களுக்கும் துணை புரிவதாய், பகைவர்களை அழிப்பதாய், அரணாய் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட அரசாட்சியைத்தான் மக்கள் விரும்புவர். கடந்த பத்தாண்டுகளாக மத்திய அரசு ஒரு நல்லாட்சியை தந்துள்ளது. பொருளாதாரம், கல்வி மேம்பாடு, அனைவருக்கும் மருத்துவ வசதி, போக்குவரத்து மேம்பாடு, மின்னணு புரட்சி, உழவு, சுகாதாரம் மக்களுக்கு அடிப்படை வசதி, அண்டை நாடுகளுடன் நல்லுறவு, உலக அரங்கில் தனித்தன்மையுடன் நிற்றல், பாரதத்தின் அடி நாதமாய் விளங்கும் ஆன்மீகத்தை புனருத்தாரணம் செய்தல், டிஜிட்டல் உலகில் பெரும் புரட்சியாக பல துறைகளில் பண பட்டுவாடாவை மாற்றி அமைத்தல் இப்படி பல துறைகளில் சாதனை புரிந்துள்ளது. குறைகள் இருக்கலாம் உண்மை. அவை சரி செய்யப்பட வேண்டும். இன்னிலையில் ஒரு நல்ல அரசையும், அரசனையும் வேதங்கள் எப்படி வாழ்த்துகின்றன என்பதைப் பார்ப்போம்.*

*'' அரசனே நீ எங்களோடு இருக்கவும், நான் உன்னைத் தேர்ந்தெடுத்துள்ளேன். உறுதியாக இருக்கவும், அசையாமல் இருக்கவும், எல்லா மனிதர்களும் உன்னை விரும்புவார்களாக. உன்னுடைய அரசு விழாமலிருக்க. இம்மனிதனில் இந்த்ரன் ஸ்தாபிக்கப்பட்டான். உறுதியான ரிஷித் தன்மையால் அது பலப்படுத்தப்பட்டது. சோமனும், ப்ரமம்மணஸ்பதியும் அவன் மீது மங்களங்களைப் பொழிவார்களாக.''*

*[ரிக் வேதம்]*

*''அரசனே உனக்கு இந்த ராஷ்ட்ரம் சிறப்பாக வந்துள்ளது. அதன் ஒரே தலைவனாக அரசு புரிவாயாக. எல்லோரும் உன்னைக் கொண்டாடி எல்லாத் திசைகளிலிருந்தும் அழைத்து வணங்கி மகிழ்வார்களாக.*

*மானிட உலகில் இந்த்ரனாக வா. அனைத்து சமூக மக்களின் நம்பிக்கையையும் பெற்றுள்ளாய். செல்வமும், ஸுகபோகமும் உன்னை வந்தடைந்துள்ளது. கருணையுடனும், கண்டிப்புடனும் பல ஆண்டுகள் அரசாட்சி செய்வாயாக.*

*இந்த வேத வாழ்த்துகள் இப்போதும் பொருத்தமாக உள்ளன. அரசனும் கீழ்க் கண்டவாறு வேண்டிகொள்கிறான்.*

*'அக்னி தேவனே! இந்த மேன்மை, ப்ரகாசம், புகழ், பலம், தேஜஸ், சக்தி மற்றும் ஆளுமை அனைத்தும் உம்மால் வந்தது. அதேபோல் எனக்கு முப்பத்து மூன்று வீர்யங்களையும் தருவாயாக'.*

*நல்லாட்சியை வேண்டும் வேத கால அரசன் போல் நம் அரசரும் நல்லாட்சியை அனவருக்கும் தந்து அரணாக அனைவரையும் காக்க வேண்டும். ஏனெனில் நெல்லோ நீரோ உயிரன்று. மன்னந்தான் உயிர் என்று சங்ககாலப் பாடல் கூறும்.*

***'நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே***
***மன்னன் உயிர்த்தன்றே மலர்தலை உலகம்***
***அதனால் யான் உயிர் என்பது அறிக***
***வேல் மிகுதானை வேந்தர்க்கு கடனே''***


***'முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு***
***இறை என்று வைக்கப்படும்'***

*என்னும் வள்ளுவர் கூற்றுக்கு இணங்க இந்த அரசும் அனைவரையும் காத்து நம் நாட்டை **'விஸ்வ குரு'** ஸ்தானத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று இறைவனைப் ப்ரார்த்திப்போமாக. அதற்கு குருவருளும் துணை நிற்க வேண்டும் என்று கூறி இவ்விதழை ஸ்ரீ சரணர்களின் பொற் பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.*

# தெய்வத்தின் குரல்

**ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்**

## அனைத்து மத மக்களும் சகோதரச் சமூகமாக



மதத்தைக் காப்பது போன்ற விஷயங்களில் அரசாங்கம் செய்வதைவிட மக்களே செய்யக்கூடியதுதான் மிக அதிகம். முதலில் ஒவ்வொரு மதத்திலும் விசுவாசமாக ஒட்டிக் கொண்டிருப்பவர்கள் அம்மதத்திலுள்ள பிறரையும் தட்டி எழுப்ப வேண்டும். இதற்கு ஹிந்து மதத்திலேயே அதிகத் தேவை இருக்கிறது. ஏனெனில், பிற மதஸ்தர் யாவருமே தூங்காமல் விழிப்புடன்தான் இருந்து வருகின்றனர். இவ்வாறு எந்த ஒரு மத சமுதாயமும் முழுதாக அம்மதத்திடம் விசுவாசத்துடன் ஒழுகச் செய்ய அந்தந்த மதத்தினரே முயல வேண்டும். மேலும், ஒவ்வொரு மதத்தினரும் பிற மதத்தினருக்கும் தமது நியாயமான உரிமைகளையும், வாதங்களையும் அன்போடு எடுத்துச் சொல்லி, அவர்களது ஒப்புதலைப் பெற முயன்று பார்க்க வேண்டும். ஏனெனில் இந்நாட்டின் பிரஜைகள் எல்லோரும் எம்மதத்தினராயினும் சகோதரச் சமூகமாகச் சேர்ந்து வாழ வேண்டியவர்கள். அப்படியின்றி மதபேத உணர்வினால் பரஸ்பரச் சர்ச்சையிலும் சண்டையிலும் ஈடுபட்டோமாயின், நமது சொந்த வாழ்நாளும் வீணாகி, நாட்டின் அமைதியும் குலைவது தவிர ஒரு பயனும் விளையாது. ஆகையால், முதற்கண் பிற மதத்தினர் என்றவுடனேயே, எதிர்ப்புணர்ச்சியோடுதான் வாதிடுவது என்றில்லாமல், நேயத்துடனேயே அணுகி, தங்களுக்குள்ள நியாயமான உரிமைகளைப் பொறுமையாக எடுத்துச் சொல்லிப் பார்ப்பது என்ற மனப்பான்மையை வளர்த்துக் கொள்வது அவசியமாகும். இதற்கு நாட்டின் மிகப் பெரும்பாலோராக உள்ள ஹிந்து மதத்தோரே வழிகாட்ட வேண்டும்.

இவ்வாறு சொல்லுவது, அம்மதத்திலுள்ள மானரோஷ உணர்ச்சிகள் மிக்கோருக்கு அவ்வளவாக ஏற்புடையதாக இராதுதான். காரணம் என்னவெனில், பொதுவாகச் சிறுபான்மையினர்தான் பெரும்பான்மையினரிடம் உரிமைகளை இழந்து அவர்களிடம் குழைந்து செல்வதாக இருக்கும். எவருக்குப் பெரும்பான்மையோ அவருக்கு பலமும் பெரியதாயிருக்குமாதலால் இதுவே உலக இயற்கை. ஆனால் விந்தையாக இந்நாட்டிலோ இதற்கு மாறான நிலையாக உள்ளது!

## இந்தியாவில் சிறுபான்மை - பெரும்பான்மையினரின் விசித்திர நிலைமை

ஆதிகாலம் தொடங்கி இங்குள்ள பெரும்பான்மை மதத்தைச் சேர்ந்தவர் பெரும்பாலும் சாத்துவீகர்களாகவும் ஏனையோர் அவர்களைக் காட்டிலும் வன்மை படைத்தவராகவும் இருந்துள்ளதைப் பிற நாட்டினரில் பலரும் கண்டு கூறியுள்ளனர். அதோடுகூட, சுதந்திரப் போராட்ட இயக்கத்தின் முக்கியமான ஹிந்துத் தலைவர்கள் சமரஸம் என்ற பெயரில் சிறுபான்மையினருக்கு மிகவும் விட்டுக் கொடுத்துக் கொண்டே போயிருப்பதில், இன்று அத்தலைவர்களே வருத்தப்படும்படியாக இத்தேசத்தைப் பிளந்து ஒரு பகுதியை ஒரு சிறுபான்மை மதத்தோர் தங்களது தனிநாடாக ஆக்கிக் கொள்ளுமளவுக்கு அவர்கள் வன்மையில் வளர்ச்சி கண்டிருக்கிறார்கள். பெரும்பான்மை மதஸ்தரோ தங்களது நியாயமான உரிமைகளுக்கு அரசாங்கத்திடம் மன்றாடவும் போராடவும் வேண்டிய விபரீதமான நிலை இந்நாட்டில் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் நமது யோசனைக்குச் சம்மதிக்கவியலாமல், 'ஆதியிலிருந்தே இந்நாட்டிற்கேயான மதத்தை, இன்றைக்கும் இங்கு மிகவும் பெரும்பான்மையாயுள்ள மதத்தைச் சேர்ந்த ஹிந்துக்கள் பிற மதங்களிடம் முதலடி வைத்துத் தங்களது உரிமைகளின் நியாயத்திற்கு அவர்களிடம் ஒப்புதல் கோருவதாவது?' என்று ஒரு சாரார் கருதக் கூடியது இயற்கையே. எனினும், நமது சீர்தூக்கிப் பார்த்த முடிவு யாதெனில், எவராயினும் எவரிடமாயினும் பிற காரணம் யாவற்றையும் ஒதுக்கி, முதற்கண் அன்பால் பரஸ்பர நல்லிணக்கம் கொள்ள முயலுவதே நமக்கும் நல்லது. நாட்டிற்கும் நல்லது. அது பயன்தராத போதே பிற உபாயங்களை மேற்கொள்ள வேண்டும். தேவையாயின் அப்போது அதனை வலியுறவே செய்யலாம்.

இங்கு கூறவிரும்பியது, மத வளர்ச்சிக்கு அரசாங்க உதவி பெறமுடியுமாயின் அப்போது ஹிந்து மதத்திற்கே அதில் அதிகமான பங்கு அளிக்கப்பட வேண்டும் என்பதன் நியாயத்தைப் பிறருக்கு அன்புடன் எடுத்துச் சொல்லி அவர்களது சம்மதத்தைப் பெற முயல வேண்டுமென்பதுதான்.

எனினும், அரசாங்கம் எல்லா மதங்களையும் ஒன்று போலவே கருத வேண்டுமாதலால், அதைக் காட்டப் பிற மதங்களுக்கும் அன்பின் அடையாளமான 'டோக்கன்' என்பது போலத் திரவிய சகாயம் செய்யலாம்; செய்ய வேண்டுவதே!

## அரசு ஆதரவு தரவேண்டிய இனங்கள்

நாம் கூற வந்தது, எல்லா மதஸ்தரும் தமது மத நூல்களைப் பதிப்பித்துப் பரப்புவதற்கும், சமயப் பேச்சாளர்கள் மூலம் மக்களுக்கு மத விஷயங்களை எடுத்துச் சொல்வதற்கும் இவற்றிலும் முக்கியமாகத் தத்தமது ஆலயங்களைப் பழுதுபார்த்துப் புதுப்பித்துக் கொள்வதற்கும், தேவையான இடங்களில் சர்ச்சைக்கு இடமில்லாமல் புதிய ஆலயங்கள் எழுப்பிக் கொள்வதற்கும், இன்னோரன்ன பல வகைகளுக்கும் அரசாங்கம் ஆதரவைத் தந்து, பெரும் பங்கோ, சிறு பங்கோ மானியமாக வழங்குதல் வேண்டும். புதிய அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய செக்யூலரிஸம் இவற்றுக்கு உதவுவதாக இருத்தல் வேண்டும்.

**இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்**
**பெருமை பிறங்கிற்று உலகு**

*இவ்வுலகில் வாழ்ந்திருக்கும் காலத்திலேயே நிலையான பேரின்பம். நிலையற்ற சிற்றின்பம் ஆகியவற்றைப் பகுத்துத் தெளிவாக ஆராய்ந்து நிவ்ருத்தி தர்மம் எனப்படும் துறவு வாழ்க்கையை மேற்கொண்டவர்களுடைய பெருமையே உலகில் மிகச் சிறந்ததாக விளங்கிக் கொண்டிருக்கிறது.*

*(குறள் 23)*

*விருப்பு - வெறுப்பு எனும் இருமைகளை வென்றவனே துறவி என அறிய வேண்டும். அவன் வாழ்வில் இருமைகளில் இருந்து எளிதில் விடுபடுகிறான்.*

*(ஸ்ரீமத் பகவத்கீதை: 5-3)*

# நீதிக் கதைகள்

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## அனைவரையும் ஒன்று சேர்க்கும் கடவுள் வழிபாடு

ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு தாய் தந்தையர் இருப்பார்கள். ஆனால், எல்லோருக்கும் ஒரே தாய் தந்தை பார்வதி பரமேஸ்வரன். நாம் எல்லோரும் இறைவனுடைய குழந்தைகள்.

சகோதரன் என்று சொல்லும் போது ஒரு பாசம், ஒரு அன்பு ஏற்படுகிறது.

கம்பராமாயணத்திலே கம்பர் சொல்கிறார்: ‘குகனோடு ஐவரானோம்’ என்கிறார் ராமர். ராமர் பெரிய அவதாரம் எடுத்தாலும்கூட மனிதத் தேகம் எடுத்து வந்திருப்பதனாலே, அவர் தம்மை ‘ஐவரானோம்’ என்கிறார்.

நம் சமுதாயத்திலே, எந்த மக்கள் எப்படி இருந்தாலும் அவர்களைச் சகோதர சகோதரிகளாகப் பாவிப்பதே நம்முடைய பழக்கம். மாற்று மதத்தினர் அப்படிப் பழக மாட்டார்கள்.

நம்முடைய சகோதர சகோதரிகள்தான் நமக்குத் தேவை. நமது சகோதரத்துவம் உலகம் தோன்றிய காலம் தொட்டு வருகிறது. இன்று நேற்றல்ல...



‘அம்மையே அப்பா... ஒப்பில்லா மணியே’ என்று பாடிய காலத்திலிருந்தே இந்தச் சகோதரத்துவம் வருகிறது.

‘பெரியபுராணம்’ என்று அருமையான புராணம் ஒன்று இருக்கிறது. அந்தப் புராணத்திலே 63 நாயன்மார்களைப் பற்றி சொல்லப்பட்டு இருக்கிறது.

அந்த 63 நாயன்மார்கள் வரலாற்றில் ஒவ்வொருவரும் ஒரு கடமையைச் செய்கிறார்கள். அந்தக் கடமையின் பலனாகக் கடவுளே நேரில் வந்து கடைசியாகக் காட்சி அளிக்கிறார். அவர்களும் நிறைவுபெற்று, வாழ்வும் பூரணத்துவம் பெறுகிறது. அவர்கள் அமரத்துவம் பெறுகிறார்கள்.

வாழ்வின் முக்கிய நோக்கம் என்னவென்று பார்க்கும் போது நாம் நம்முடைய கடமைகளை ஒழுங்காகச் செய்தால்,

கடவுள் நம் முன் காட்சி அளித்து, நமக்கு அருள் பாலிப்பார் என்பதுதான். அதுதான் பெரிய புராணத்தின் தத்துவம். அந்த வகையிலே பெரிய புராணத்திலே வரும் அனைவரையும், 'நாயன்மார்கள்' என்று வணங்கித் துதிக்கிறோம். அப்படிப்பட்ட உயர்ந்த நிலையை, நல்ல நிலையை, கடவுளைக் கண்ட அனுபவ நிலையை அடைந்த நாயன்மார்களை நாமெல்லாம் இன்றைக்கும்கூட கோயில்களில் வைத்து வணங்குகிறோம்.

நாம் இன்றைக்கு மட்டும் வைக்கவில்லை. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு, சிவன் கோயில்களில் இந்த 63 நாயன்மார்களைப் பிரதிஷ்டை செய்தார்கள்.

அதில் அந்தணர் முதல் நந்தனார் வரை அனைவருமே இருக்கிறார்கள். அதுதான் இந்து மதத்தினுடைய சகோதரத்துவம்.

இந்து மதத்தின் சகோதரத்துவம் என்னவென்றால், பல்வேறு இனத்தைச் சேர்ந்த நாயன்மார்களை ஒரே வரிசையில் சமமாக அடியார்களாக, பக்தர்களாக நிறுத்தி, கும்பிடும்படியாக வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு உற்சவமும் நடத்துகிறார்கள். அவர்களைச் சிவனடியார்கள் என்று நாம் கொண்டாடுகிறோம்.

நம் சமயத்திலே எந்த வேறுபாடும் கிடையாது என்பதற்கு எடுத்துக்காட்டு நாயன்மார்களின் வரலாறு. அதேபோல வைணவத்தில் கூட பன்னிரு ஆழ்வார்கள் இருக்கிறார்கள். திருப்பாணாழ்வார் உட்பட பல ஆழ்வார்கள் இருக்கிறார்கள். அவர்களும்கூட இறைவன்மீது அன்பு காட்டி இறைவனை நேராகக் கண்டவர்கள். நேராக இறைவனைக் கண்டவர்கள் என்பதால் அவர்களைப் போற்றி வழிபட்டு இறைவனுக்குச் சமமாக வைத்திருக்கிறோம்.

நாமெல்லாம் கடவுள் பக்தர்களாக இருக்கிறோம். ஆனால் அவர்களைப் போல இறைவன் மீது முழு அன்பு வைத்து இறைவனுக்காகவே கடமையாற்றி வாழ முடியவில்லையே? யாரோ ஒரு சிலர் மட்டும் தான் கடவுளை எல்லாப் பொழுதும் எண்ணிக் கொண்டு இருக்கிறார்கள்.

காலை மட்டுமோ, மாலை மட்டுமோ, அல்லது காலையும் மாலையும் இருவேளையுமோ கடவுளை நினைத்துக் கும்பிடுகிறார்கள். மாற்று மதத்தினர் ஒரு நாளைக்கு ஐந்து வேளை கும்பிடுகிறார்கள். கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக் கிழமை தவறாமல் கும்பிடுகிறார்கள். நாமும் கூட காலை மாலை இரண்டு வேளையும் கும்பிட வேண்டும்.

சிவன் கோயிலில் ஐந்து வேளை பூஜை பண்ணுகிறார்கள். அந்த ஐந்து

பூஜைகளிலும் கலந்து கொண்டு தரிசித்தால் நல்லது. அது குறைந்து போனதால் தான் நாட்டில் செழிப்பு குறைந்து போய்விட்டது. காலை மாலை இரண்டு வேளை நைவேத்தியம் மட்டுமே செய்கிறோம். நம்முடைய வாழ்க்கையில் கூட அவ்வப்போது கடவுளை வழிபாடு செய்கிறோம். வீட்டிலே கும்பிடுகிறோம். கோயிலிலேயும் கும்பிடுகிறோம்.

கோயிலிலே இறைவன் நமக்காக, பக்தர்களுக்காக மக்களுக்காக இருக்கிறார். நாம் எல்லோரும் ஒற்றுமையாகக் கோயிலில் சென்று வழிபட்டால் இறைவன் மிகவும் சந்தோஷப்படுவார். நமக்கும் அருள்புரிவார். நம்முடைய வாழ்க்கையும் மேன்மையுறும், உயரும்.

கடவுளுக்காக கோயில் அல்ல; நமக்காகத்தான் கோயில். அதற்காகவே ஆண்டவனே நம்மை எதிர்பார்த்துக் கொண்டு கோயிலில் காத்திருக்கிறார். அந்தக் கடவுளைத் தேடி கோயில்களுக்குச் செல்ல வேண்டும்.

அந்தக் கோயில் வெறுமனே ஹாலாக இருந்தாலோ, பிரார்த்தனைக் கூடம் போல் இருந்து விட்டாலோ அப்படி ஆராதனை பண்ணுவது கஷ்டம். பக்தியும் வராது.

அதற்காகவே கோயில்களுக்கான வாஸ்துப்படி, ஆகமப்படி, பிரகாரம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், அர்த்த பிரகாரங்கள் வைத்து, கர்ப்பக் கிரகமும் வைத்து, **'இந்து தர்ம'**ப்படி நம் கோயில்களைக் கட்டினார்கள். ஒவ்வொரு மண்டபத்துக்கும் ஒரு காரியம் வைத்தார்கள். சொற்பொழிவு நடைபெறுவது மகா மண்டபத்தில்; மூலவர் இருப்பது கர்ப்பக்கிரகத்தில்.

அந்தக் காலத்திலிருந்து இந்த முறைப்படிதான் திருக்கோயில்கள் கட்டப்பட்டு, மக்களும் சென்று வழிபட்டு வருகிறார்கள். 'பாடல் பெற்ற க்ஷேத்திரங்கள்' என்று தேவாரம் பாடிய க்ஷேத்திரங்கள் தமிழ்நாட்டிலே நிறைய உண்டு. அதேபோலப் பாடல்பெற்ற விஷ்ணுக் கோயில்களும் நிறைய உள்ளன.

இறைவன் மீது யார் யார் தோத்திரங்கள் பாடினார்களோ, அவர்களது பெயரால் அந்தந்தக் கோயில்கள் சிறப்பு பெற்று விளங்குகின்றன.

தேவாரம், திருவாசகம், திருப்புகழ் ஆகியவற்றை ஸ்தோத்திரங்கள் என்பார்கள். சாஸ்திரங்களும் இருக்கின்றன. மெய்கண்ட சாஸ்திரம், சிவானந்த சாஸ்திரம் ஆகியவை உள்ளன.

சாஸ்திரங்கள் என்பது கடவுளை எப்படி, பிரதிஷ்டை செய்ய வேண்டும், கடவுளை எப்படி வழிபாடு செய்ய வேண்டும், கடவுளுக்கு எப்படி உற்சவங்கள் நடத்த வேண்டும் என்ற நடைமுறை விஷயங்களை விளக்குவது ஆகும்.

(தொடரும்)

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

(ஆச்சாரியாள் அவர்கள் வேடல் பாடசாலையில் 18/04/2024 அன்று வித்யார்த்திகளுக்கு ஆற்றிய அருளுரை.)



பத்ராசலத்தில் இன்று, இராம நவமி. அடுத்த நாள், இராம கல்யாண உற்சவம் விசேஷமாகக் கொண்டாடுகிறார்கள். இங்கே சீதா கல்யாணம் செய்வது நல்ல விஷயம். நீங்கள் அனைவரும் கூட, தர்ம வித்தைகளை கற்றுக் கொண்டு, புதிய கல்விகளையும் கற்றுக் கொண்டு, பாரம்பரியமாக இருந்து, இங்கு நன்றாக படித்து, நமது தேசம், நமது சமுதாயம், நமது தர்மத்திற்கு அனுகூலமாக ஆலோசனை இருக்க வேண்டும்.

இந்த தேசத்தில் உள்ள புண்ணிய ஷேத்திரம் அனைத்தையும் பவித்ரமாக பரிபாலனம் செய்து, பாதுகாக்க வேண்டும்.சக்தியையும், சாமர்த்தியம் பெற்று, இந்த தேசத்தின் ஆர்ய வித்யாவை, எதெல்லாம் உள்ளதோ, அதை கற்றுக் கொள்ள வேண்டும்.

சந்தியா ஸ்தானம் **ஜெபோ ஹோம: தேவதானம் ச தர்ப்பணம்** என்ற ஆரிய பழமையான கலாச்சாரத்தை நீங்கள் மனசா, வாசா, கர்மனா மூலம் ஏற்று, சந்தியா வந்தனம் நித்ய கர்மாவை செய்ய வேண்டும். காயத்ரீம் ஆவாஹயாமி, சாவித்ரீம் ஆவாஹயாமி, சந்த ரிஷிம் ஆவாஹயாமி என்று கூறி, அந்த காயத்ரி அனுஷ்டானம் என்ன உள்ளதோ, அதை விடாமல் செய்ய வேண்டும். உங்களுக்கு அனுஷ்டானம் என்பது மிக முக்கியம்.

நீங்கள் பி.எஸ்.சி படித்தாலும், என்ஜினீயரிங் படித்தாலும், ஐ.ஏ.எஸ் வாழப் படித்தாலும், முக்திக்கு வேண்டி, நீங்கள் படிக்க வேண்டிய, நீங்கள் செய்ய வேண்டிய

அனுஷ்டானங்களை செய்ய வேண்டும். முக்கியம். நீங்கள் தினமும் இதைச் செய்யவே, இந்த முக்கியமான ஏற்பாடுகள். நீங்கள் படிக்க வேண்டும் என்பது முக்கியம் வாழ்க்கையில். பகல், இரவு என்று பாராமல், வேறு சிந்தனையின்றி நீங்கள் படிக்க வேண்டும். **'வித்யா தானம் சர்வ தானத் ப்ரதானம்'**. வித்யா தானம் என்பது சாலச் சிறந்தது. காயத்ரி என்பது ஒரு வித்யா. இதை ஒரு நாள் செய்தால் போதாது. காலை, மாலை, பகல் என்று தினமும் செய்ய வேண்டும். இந்த வித்தையை நேசிக்க வேண்டும். சமஸ்கிருத பாஷை, பகவத் கீதை கற்றுக் கொள்ள வேண்டும். வீட்டில் செய்யக் கூடிய பூஜை , அதற்கு அனுகூலமானது என்ன? பஞ்சாங்கம், பஞ்ச கவ்யம், பஞ்சாமிர்தம். பஞ்ச பூதம், பஞ்ச தேவதை என்றால் என்ன? தூப, தீப நைவேத்தியம் என்றால் என்ன? இதையெல்லாம் கற்றுக் கொள்ள வேண்டும். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, நீங்கள் கற்றுக் கொண்டு, ஆரிய கலாச்சாரத்தை காப்பாற்ற வேண்டும். யுக்தி, முக்தி இரண்டிலும் சிறந்து விளங்க வேண்டும்.

நம்பிக்கையுடன் உங்கள் பெற்றோர்கள் அனுப்பி வைத்தார்கள். அவர்கள் நம்பிக்கையும், கிராம மக்களின் நம்பிக்கைக்கு நீங்கள் பாத்திரமாக வேண்டும். தார்மீகமாக உள்ளார்கள் நமது பையன்கள் என்று கிராம மக்கள் நினைக்க வேண்டும்.

ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்கர

## காஞ்சி மஹாபெரியவரின் உபதேசம்



- எல்லோரும் நலமுடன் வாழ கடவுளை வேண்டுங்கள்
- மதத்தை மதிப்பவருக்கு ஓட்டளியுங்கள்
- தாய் மதத்தை பழிப்பது தாயை பழிப்பதற்கு சமம்.
- குலதெய்வத்தை ஆண்டுக்கு இரண்டு முறையாவது தரிசியுங்கள்.
- தேய்பிறையில் செய்யும் வழிபாடு பிரச்னையை போக்கும்.
- வளர்பிறையில் செய்யும் வழிபாடு வளர்ச்சியை தரும்.
- ஈர ஆடையுடன் வழிபாடு செய்யக்கூடாது.
- மனதை கெடுக்கும் எந்த நிகழ்ச்சிகளையும் பார்க்காதீர்கள்.

# ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மேந்த்ரரின் கீர்த்தனைகள்

**सधाशिव ब्र्ह्मेन्द्रस्य कीर्तनानि गायति वनमाली**

**गायति वनमाली मधुरम् गायति वन माली**

**पुश्पसुगन्धिसुमलयसमीरे मुनिजनसेवित यमुनातीरे (गायति)**

**कूजितसुकपिकमुककिन्जे कुतिलालकबहुनीरधपुन्जे (गायति)**

**तुलसीदामविभूषनहारी जलजभवस्तुतसटगुणशौरी (गायति)**

**परमहम्सहृदयोत्सवकारी परिपूरितमुरलीरवधारी (गायति)**

## காயதி வன மாலீ

*காயதி வன மாலீ மதுரம் காயதி வனமா*

புஷ்பஸுகந்திஸுமலய ஸமீரே முனிஜனஸேவித யமுனா தீரே (காயதி)

கூஜிதஸுகபிகமுககககிஞ்சே குடிலாலகபஹுனீரதபுஞ்சே (காயதி)

துலஸீதாமவிபூஷனஹாரீ ஜலஜபவஸ்துதஸத்குணசௌரீ (காயதி)

பரமஹம்ஸஹ்ருதயோத்ஸவகாரீ பரிபூரிதமுரலீரவதாரீ (காயதி)

*பொருள் : வனமாலியயை அணிந்த க்ருஷ்ணன் பாடுகிறான் இனிமையாய் பாடுகிறான். பூக்களின் நறுமணத்தோடு கூடியதாய் மலய மலையினின்று வீசும் தென்றலை உடையதாய் முனிவர்கள் ஸேவிக்கும் யமுனைக் கரையிலே பாடுகிறான்.*

*கிளி, குயில், முதலான பறவைகள் கூவும் தோட்டங்களை உடையதும் நெற்றி மேலே படியும் சுருட்டை மயிர் போன்ற பல மேகக்கூட்டங்களை உடையதுமான யமுனைக் கரையில் பாடுகிறான். துளஸீ மாலையை அணியாகக் கொண்டு மனதைக் கவர்கின்றவனாய் தாமரை மலரில் பிறந்த ப்ரம்மனால் துதிக்கப்பெற்ற நற்குணங்களையுடையவனாய் சூரவம்சத்தில் பிறந்த க்ருஷ்ணன் பாடுகிறான்.*

*பரமஹம்ஸர்களின் இதயங்களை களிப்புறச் செய்வோனும் முரளி என்னும் புல்லாங் குழலிலே ப்ரவாஹமாய் பாடுகிறான். குழலிலே நிரப்பப் பெற்ற தாரையாய் பெருகும் குழலோசைகளை உடையவனுமான க்ருஷ்ணன் பாடுகிறான்.*

# ராஜதரங்கிணி 16

பி. ஆர். கண்ணன்

**தரங்கம் - 8 (தொடர்ச்சி)**

**ராஜா ஸுஸ்ஸலர்**

ஸுஸ்ஸலர் சண்டையிட்டு மறுபடியும் ராஜ்யத்தைக் கைப்பற்றினார். பிக்ஷு ஸுஸ்ஸலருடன் யுத்தம் செய்ததை கல்ஹணர் வர்ணிக்கையில் சாஸ்த்ரீயமான உதாரணத்தைச் சொல்கிறார்:

**தத: ப்ரபூத்யபூத்கோப்தா புர: பஸ்சாச்ச ஸர்வதா ।**
**விஸ்வேதேவ இவ ஸ்ராத்தே யுத்தே பிக்ஷுர்மஹாபட:** ।। 1021 ।।

‘ஸ்ராத்தத்தில் விஸ்வேதேவர்களைப் போல், யுத்தத்தில் இப்போது சக்திவாய்ந்த சேனாபதியான பிக்ஷு முன்பக்கமும், பின்பக்கமும், எல்லா காலங்களிலும் சேனையைக் காத்தார்.’

ஸுஸ்ஸலர் காலத்தில் தொடர்ந்தாற்போல் உட்பூசலும், த்ரோகமும் நிகழ்ந்த வண்ணம் இருந்தன. பெண்களைக் கொல்ல பெண்கள் அனுப்பப்பட்டனர்.

**விதஸ்தாத்ருஸ்யதோஜ்வாலவேஸ்மமாஸ்லிஷ்டதடத்வயா ।**
**ரக்தாக்தோபயதாரேவ க்ருதாந்தஸ்யாஸிவல்லரீ** ।। 1175 ।।

‘விதஸ்தா நதியின் இருகரைகளிலும் நெருங்கிக் காணப்பட்ட வீடுகள் தீக்கிரையாயின. அது யமதர்மராஜனின் வாள், இருமுனைகளிலும் ரத்தம் தோய்ந்து ஈரமாகத் தோற்றமளித்தது போல் இருந்தது.’ தீச்சம்பவங்களினால் கடும் பஞ்சம் ஏற்பட்டது. காலப் போக்கில் ஸுஸ்ஸலர் தன் புத்ரனையே ஸந்தேகித்தார். இறுதியில் உத்பலர் என்ற சேனாபதியினால் ராஜா கொல்லப்பட்டார்.

**ராஜா ஜயஸிம்மர்**

ஸுஸ்ஸலரின் புத்ரரான ஜயஸிம்மர் ராஜாவானார். ஆனால் உட்பூசல், சண்டைகள் தொடர்ந்தன. பிக்ஷு சண்டையில் உயிர் துறந்தார். கல்ஹணரின் சில மதிப்பீடுகள்:

**ஆரம்பமாத்ரமபி கஸ்யசிதேவ ஸித்த்யை கஸ்சித்ப்ரயத்நபரமோப்யபலப்ரயாஸ :**
**மந்தாத்ரிணாம்ருதமவாப்யுததோ்முஹூர்தாஸக்தி சிராத்விததா ந ஹிமாத்ரிஜேந**
।। 1591 ।।

‘ஓரொருவருக்கு ஒரு கார்யத்தை ஆரம்பிப்பதே அதன் வெற்றிக்குப் போதுமானது;

மற்றொருவருக்கு முழு முயற்சிகள் செய்தும் அவை பலனளிப்பதில்லை. மந்தரமலை மத்தாக இருந்து ஸமுத்ரத்திலிருந்து சிறிது நேரத்தில் அம்ருதத்தை வெளிக் கொணர்ந்தது; ஆனால் ஹிமவானின் புத்ரனான மைனாகம் வெகுகாலமாக ஸமுத்ரத்தினிடம் தோழமை பூண்டும், அந்த கார்யத்தைச் செய்யவில்லை.'

**ஸ்ரீஸுதாரத்நதந்த்யஶ்ணவஶஶங்காதிப்ரகாஶநே ந**
**த்ருஷ்டசித்ரஸ்வபாவோப்திர்யதாயம் பார்திவஸ்ததா ।।**
**தத்ர தத்ராத்புதம் பாவம் தர்ஶயந்புவநாத்புதம் ।**
**பரிச்சேத்யாநுபாவத்வம் ந கேஷாமபி கச்சதி ।। 1780-1781 ।।**

'லக்ஷ்மி, அம்ருதம், ரத்னங்கள், யானை, குதிரை, சந்த்ரன், மற்றும் உயர்ந்த வஸ்துக்கள் வெளிவந்தபோது, ஸமுத்ரத்தின் ஆச்சர்ய குணம் தெரியவந்தது. அதுபோல, இந்த ராஜாவும் பல வழிகளில் தன் குணாதிசயங்களை வெளிக் கொணர்கிறார்; அவை உலகின் அதிசயங்களாக உள்ளன. ராஜாவின் ஆழத்தை யாராலும் காண முடியவில்லை.' கோஷ்டேஸ்வரன், லோதனன், மல்லார்ஜுனன் ஆகியோர் பல யுத்தங்களுக்குப்பின், அரியணை ஏறினர்; ஆனால் சீக்கிரமே, சண்டையில் வெளியேற்றப்பட்டனர். கல்ஹணர் ஒரு ஸ்லோகத்தில் (2006) பரோஷ்ணி நதியைப்பற்றிக் குறிப்பிடுகிறார். ரிக்வேதத்தில் சொல்லப்பட்ட நதிகளில் ஒன்று இது. விதஸ்தாவின் கிளை நதியான இது தற்போது ராவி என்று வழங்கப்படுகிறது.

ஜயஸிம்மர் எதிரிகளை விரட்டியபிறகு, ப்ரஜைகளின் ஸுபீக்ஷத்திற்காக பல நற்கார்யங்களில் ஈடுபட்டார். நிறைய தக்ஷிணையுடன் கூடிய யாகங்கள், தீர்த்தயாத்ரைகள் முதலானவை பெருமளவில் நடந்தன. ஸத்பாத்ரங்களுக்கு தன் கிடங்கிலிருந்தே பொருட்களை வழங்கினார். அவர் ஆலயங்களைப் புதுப்பித்தார். அறிஞர்களுக்கு க்ராமங்களையும், பெரிய குடியிருப்புகளையும் கட்டி வழங்கினார். ரில்ஹனேஶ்வரர், பாலகேஶ்வரர் ஆலயங்களை எழுப்பினார். புத்தவிஹாரங்களையும் பராமரித்தார். ராஜாவின் மந்த்ரிகளும், அதிகாரிகளும் ஆலயங்கள் கட்டினர்.

ஒரு சமயம் உட்கலகத்தினால் நீண்ட யுத்தம் ஏற்பட்டது. கௌடதேசம் (வங்காளம்) ப்ரதேசத்திலிருந்து வந்த சில த்ரோகிகள் காஷ்மீரில் ஶாரதாதேவியைத் தரிசிக்க வேண்டும் என்று சொல்லி உள்ளே புகுந்தனர். அவர்கள் கொல்லப்பட்டனர்.

**பரேத்யு: ஶாரதாம் த்ருஷ்ட்வா ஸம்ப்ராப்தோ கர்கநந்தந: ।**
**ஸம்க்ரந்தநபுரீபௌரயோதைர்வ்ருத்திம் ஹதைர்வ்யதாத் ।। 2556 ।।**

'மறுநாள் கர்கரின் புத்ரன் ஶாரதாதேவியைத் தரிசித்து, பின்னர் யுத்தபூமிக்கு வந்து, வீரர்களை யுத்தத்தில் வதம் செய்து, இந்த்ரனின் பட்டணத்தின் ஜனத்தொகையை வளர்த்தார்.'

(தொடரும்)

# முகாம் நிகழ்ச்சிகள்

## பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் தலைமையிட நிகழ்ச்சிகளின் தொகுப்பு

**ஏப்ரல்** 24 - காஞ்சிபுரம் ஸ்ரீ மடத்தில் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் பக்தர்களுக்கு தரிசனம் தந்தருளினார்கள்.



**ஏப்ரல்** 25 - இன்று சென்னை பெருங்குடியில் அமைந்துள்ள ஸ்ரீ இஷ்ட சக்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேக வைபவத்தை முன்னிட்டு பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் காணொலி வாயிலாக அனுக்ரஹபாஷணம் அளித்தருளினார்கள்.

**ஏப்ரல்** 26 - திருநெல்வேலி மாவட்டத்தில் காஞ்சி சங்கரா கல்வி அறக்கட்டளையில் இயங்கும் பள்ளிக் கட்டிடம் புதுப்பிக்கப்பட்ட புதிய கட்டிடத்தை பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப்பணி CG Power and Industrial Solution நிறுவனத்தின் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**ஏப்ரல்** 28 - சென்னை திருப்புகழ் அன்பர்கள் பொன்விழா நிகழ்ச்சியினை காணொலி காட்சி வாயிலாக அனுக்ரஹித்து ஆசி வழங்கினார்கள்.

**மே** 2 - ஸ்ரீ மடத்தில் பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகள் பக்தர்களுக்கு தரிசனம் தந்தருளினார்கள். ஸ்ரீ மடத்தில் ஸ்ரீ சுரேஸ்வராச்சார்யாள் சந்நிதி கும்பாபிஷேகத்தை முன்னிட்டு மே 1-ம் தேதி முதல் 3 நாட்கள் நிகழ்ச்சிகளாக வேத பாராயணம் ஹோமம் மற்றும் பல்வேறு பூஜைகளும் நடைபெற்றன. மே 3ம் நாள் ஜகத்குரு ஸங்கர பகவத் பாதரால் நிறுவப்பட்ட காமகோடி பீடத்தின் இரண்டாவது பீடாதிபதிகளான ஸ்ரீ சுரேஸ்வராச்சார்யார் சந்நிதி கும்பாபிஷேகம் பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகளின் திருக்கரங்களால் சிறப்பான முறையில் காலை 10.00 முதல் 10.25க்குள் நடைபெற்றது.

**மே** 5 - ஸ்ரீ மடத்தில் இன்று பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் முன்னிலையில் சூர்ய நமஸ்காரம் பக்தர்களால் நடைபெற்றது.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர ஸரஸ்வதி சுவாமிகளின் ஆசிகளுடன் சங்கீத மும்மூர்த்திகளின் ஜெயந்தி மஹோத்ஸவம் மே 9 முதல் 13 வரை திருவாரூர் நகரில் நடைபெற்றது.

**மே 8** - சங்கர ஜெயந்தி மஹோத்ஸவம் இன்று முதல் ஆரம்பிக்கப்பட்டு முதல் நாளான இன்று ஸ்ரீ ஆதிசங்கரர் ஊர்வலமாக சர்வதீர்த்த குளக்கரையில் உள்ள ஸ்ரீ காசி விஸ்வநாத சுவாமி ஆலயத்திற்கு எழுந்தருளச் செய்து வேத பாராயணங்களுடன் ருத்ராபிஷேகம் நடத்தப்பட்டு தொடர்ந்து ஊர்வலமாக ஸ்ரீ மடத்திற்கு எழுந்தருள செய்யப்பட்டு தீபாராதனையும், தோடகாஷ்டகமும் பாடப் பெற்றது.

**மே 12** - சங்கர ஜெயந்தி மஹோத்ஸவம் ஸ்ரீ ஆதி சங்கரர் சந்நிதியிலும், அதிஷ்டானங்களிலும் விசேஷ அலங்காரங்களுடன் நடந்தது.

ஸ்ரீ காமாட்க்ஷி அம்பாள் ஆலயத்திலும் ஸ்ரீ சங்கர ஜெயந்தி மஹோத்ஸவம் விமரிசையாக நடந்தது.

ஸ்ரீ சங்கர ஜெயந்தி மஹோத்ஸவத்தை முன்னிட்டு வார்க்ஷிக வேத பூர்த்தி செய்த வித்யார்த்திகளுக்கு பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் அனுக்ரஹத்துடனும் ஆசிகளுடனும் நற்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

ஆசார்யாள் பரமேஸ்வரனின் அவதாரம். அவருடைய அவதாரம் பூமியில் அறியாமையை போக்கவும், வேத சாஸ்திரத்தில் தவறான கருத்தை நீக்கவும் ஆகும். காலடியில் அவருடைய அவதார நோக்கம் தேச சஞ்சாரம் செய்யவும், வேத பிரசாரம் செய்யவும், வேதத்தையும், வேத கர்மாக்களையும் பற்றிய கேள்விகளுக்கு உண்மையான விளக்கமளித்து லோகத்தில் அனைவரும் வேத சாஸ்திரத்தின் வழி நடக்கச் செய்யவும் ஆகும்.

பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் வருகை தந்த வித்யார்த்திகள் மற்றும் அவர்தம் ஆசிரியர்களுக்கு ஆசிகள் வழங்கினார்கள். பல்வேறு பகுதியிலிருந்து வந்துள்ள வித்யார்த்திகள் வேதத்தில் பல்வேறு நிலைகளிலும தொடர்ந்து பயிலுவதுடன் தேர்விகளிலும் கலந்து கொண்டார்கள். தேர்வுகள் ஸ்ரீ மடத்தில் வேத ரக்ஷண நிதி டிரஸ்ட்டால் ஒவ்வொரு வருடமும் சங்கர ஜெயந்தி மற்றும் விஜயதசமி தினத்தன்று இருமுறைகள் நடத்தப்பட்டு வருகிறது. இது சமயம் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளால் பக்தர்களுக்கு அனுக்ரஹபாஷணம் வழங்கியதை தொடர்ந்து நற்சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. நிகழ்ச்சியில் வணக்கத்திற்குரிய நீதிபதி

சி.வி. கார்த்திகேயன் அவர்கள் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு சொற்பொழிவு ஆற்றினார்கள்.

சங்கர ஜெயந்தியின் நிறைவாக ஆதிசங்கரர் உருவச்சிலை தங்கரதத்தில் நான்கு ராஜ வீதிகளிலும் புறப்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி விமரிசையாக நடைபெற்றது.

**மே** 13 - சித்திரை 30, ஸ்ரீ மடத்தில் இரண்டு அதிஷ்டானங்களிலும் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளால் புஷ்பாஞ்சலி செய்விக்கப்பட்டது.

**மே** 20 - ஸ்ரீ மடத்தில் மாலை பிரதோஷ பூஜை பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் நடத்தியருளினார்கள்.

**மே** 24 - ஜெயந்தி மஹோத்ஸவம் ஜகத்குரு பூஜ்ய ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகளுக்கு மே 22 முதல் மே 24 வரை வேதபாராயணம், வித்வத் சதஸ், உபந்யாசம் மற்றும் நாத சமர்ப்பணங்களுடன் நடைபெற்றது. ஜெயந்தி தினமான இன்று காலை 7.00 மணி முதல் விசேஷ அபிஷேகங்கள், அலங்காரம், ஹோமம், அலங்காரம், அர்ச்சனை நடைபெற்றது. மஹா தீபாராதனை பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகளால் நிகழ்த்தப்பட்டது. நிகழ்ச்சியில் பக்தர்கள் பெருமளவில் கலந்து கொண்டு பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் அருளாசி பெற்று உய்தார்கள். பக்தர்கள் அனைவருக்கும் அன்ன பிரசாதம் வழங்கப்பட்டது.

ஹர ஹர சங்கர ஜெய ஜெய சங்கர

உடல்நலம் பெற...

*காஞ்சி மஹாபெரியவர் பரிந்துரைத்த ஸ்லோகம்*

**அஸ்மிந் பராத்மன் நநு பாத்மகல்பே**
**த்வமித்த முத்தாபித பத்மயோநிஹி!**
**அநந்த பூமா மமரோக ராஸிம்**
**நிருந்தி வாதாலய வாஸ விஷ்ணோ !!**

எங்கும் நிறைந்திருக்கும் குருவாயூரப்பா! பிரம்மாவைத் தோற்றுவித்தவரே! நீயே நோய்களைப் போக்கி நலம் தர வேண்டும்.

ஓம் ஸ்ரீ மஹா பெரியவா சரணம்' என தினமும் 108 முறை சொல்லுங்கள்.

## SRI SANDEEPANI GURUKULA TRUST,

4/11, Nethaji Nagar Main Road, Jafferkhanpet, Chennai - 600 083, INDIA.

श्रीहरिः

श्रीरामः शरणं मम

# ஏகாகீ ருக்வேத கண்டஸ்த$^2$ க$^4$னபாராயண பத்திரிகை





। साक्षान् मूलप्रमाणाय विष्णोरमिततेजसे ।

। आद्याय सर्ववेदानां ऋग्वेदाय नमोनमः ।

**Date: 10.06.24 – 21.07.24 (42 Days)**

**Venue: Sri Shankara Gurukulam, Abhiramapuram, Chennai 600018**







श्री चन्द्रशेखरेन्द्र जयेन्द्र शंकरेति आकृतिभृत् त्रयीवयः ।

कामकोटि पदभूषणः गुरुः भाष्यकृत् कुवलयं पुनातु सः ।

நமோநம: ஸ்ரீ ராமஜயம்

ஸ்வஸ்திஸ்ரீ மங்களகரமான குரோதி வருஷம் வைகாசி மாதம் 28ம் தேதி முதல் ஆரம்பித்து (10-06-2024) ஆடி மாதம் 5ம் தேதி வரை (21-07-2024) ஏகாகீ ருக்வேத கண்டஸ்த[2] க[4]னபாராயணம் நடைபெறவுள்ளது.

। धर्मो विश्वस्य जगतः प्रतिष्ठा|
என்று வேதோக்தமான தர்மமே லோகத்திற்கு ஆதாரம் என்றும்.
नान्यतो ज्ञायते  धर्मः वेदादेवैष निर्बभौ ।
तस्मात् सर्वप्रयत्नेन धर्मार्थं वेदमाश्रयेत् ।

நமது ஸனாதன தர்மஶாஸ்த்ர நூல்களில், ஜகத்திற்கு ஆதாரமான தர்மமானது, வேதத்திலிருந்தே உண்டானது என்பதால், தர்ம ஸம்ரக்ஷணத்திற்காக, பெரு முயற்சியுடன், வேதத்தை ஆஶ்ரயிக்க வேண்டியுள்ளது என்றும், அவ்வாறே நமது தாய் மொழியான தமிழிலும்

**பாடல் #51: பாயிரம் - 2 வேதச் சிறப்பு**

**வேதத்தை விட்ட அறம்இல்லை - வேதத்தின்**
**ஓதத் தகும்அறம் எல்லாம் உள**
**தர்க்க வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற**
**வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே.**
**-திருமூலர் திருமந்திரம்**

விளக்கம்: வேதங்களை விட பகவான் வழங்கிய அறம் வேறொன்றும் இல்லை. ஓதுவதற்கும் அதன்படி நடப்பதற்கும் ஏற்ற அறங்கள் எல்லாம், வேதத்தில் உள்ளது. நமது முன்னோரான மஹரிஷிகள் அனைவரும், பகவான் வழங்கிய வேதத்தை, ஏன் எதற்கு, என்கிற வீண் விவாதங்கள் செய்யாமல், அனைவரும், பகவான்  வழங்கிய வேதத்தை ஓதியே, முக்தியைப் பெற்றார்கள். அவ்வழியே

यथाग्निर्वायुना धूतो हविषा चैव दीप्यते ।
एवं जप्यपरो नित्यं मन्त्रयुक्तः सदाद्विजः" ।

அக்னியானது எப்படி காற்றினால் வீசப்பட்டு நெய் முதலிய ஹவிஸ்ஸினால் ஜ்வலிக்கின்றதோ அவ்விதமே, மந்த்ரோபாஸன ப்ராம்ஹணன், ஜபயக்ஞாதிகளால் விசேஷமாய் ப்ரகாசிக்கிறான்... என்பதால்

"शब्दे ब्रह्मणि निष्णातः परं ब्रह्माधि गच्छति

அந்த பரவஸ்துவை அடைய, வேதமே கதி என்பதால், பகவத் பஜனானுரூபமாகிய, வேதபாராயண வைபவம், நமது சென்னை **ஶ்ரீசாந்தீபனி குருகுலம் டரஸ்ட், சென்னை** மூலமாக காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் **ஜகத்குரு ஶ்ரீ ஶ்ரீ ஶ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்** அனுக்ரஹத்துடன் **மஹாரண்யம் ஶ்ரீ ஶ்ரீ ஶ்ரீ முரளீதர ஸ்வாமிகள்** அனுக்ரஹத்துடனும் **"வக்தா-ஶ்ரோதா"** என்ற முறையில் ஏகாகீ கண்டஸ்த ருக்வேத கனபாராயணம் மற்றும்

स्वाध्याय प्रवचनाभ्यां न प्रमदितव्यम्

வேத பாராயணத்துடன் ப்ரவசனத்தையும் செய்தல் வேண்டும் என்று நமது வேத்தில் உபதேசிக்கப்பட்டுள்ளதால் மற்றும்

ब्राह्मणेष्वपि वेदज्ञो ह्यर्थज्ञोऽभ्यधिकस्ततः ।
अर्थज्ञात्संशयच्छेत्ता ततः श्रेयान् स्वकर्मकृत् ॥

-श्रीमद्भागवतम् 3:29:32

அந்தணர்களிலும் வேதமறிந்தவரும், அவர்களில் அந்த வேதத்தின் பொருளறிந்தவரும் சிறந்தவர்.

அவ்வாறு பொருளுணர்ந்தவர்களிலும் அப்பொருளில் விளையும் ஐயங்களைத் தீர்க்கும் திறனுடையவரும் தமது நெறிமுறைகளைச் செவ்வனே ஆற்றுபவர் சிறந்தவர்.

**வைகாசி 28 (ஜூன் 10) ஆரம்பித்து, ஆடி 5 (ஜூலை 21),** குரு பூர்ணிமா வரை, 42 நாட்கள்,

அபிராமபுரம் **"ஶ்ரீசங்கர குருகுலத்தில்",** பகவத் ப்ரீதிகரமாக குருவருள் கொண்டு நடக்க இருக்கிறது.

வேதபாராயணத்தை மற்றும் விசேஷ வேத மந்திரார்த்த உபன்யாசங்களையும், அனைவரும் ஸ்ரவணம் செய்து குருவருள் மற்றும் பகவத் க்ருபைக்கு பாத்திரராகும் படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

ராம் ராம்

वेदाक्षराणि यावन्ति पठितानि द्विजादिभिः ।
तावन्ति हरि नामानि कीर्तितानि न संशयः ॥

பாராயணம் செய்யும் முறை...
தனி ஒருவராக 155039 பதங்களைக் கொண்டு கனபாடமாக சொல்வது
- (FORMULA. 1221123321123. •.2332234432234.)

கனபாராயண



வக்தா - ப்ரம்மஸ்ரீ L. ராகவேந்திர கனபாடிகள்

ப்ரம்மஸ்ரீ ஆம்னாய வாசஸ்பதி G. ஸூர்யநாராயண கனபாடிகளிடம் இவர் ருக் வேதம் ஸலக்ஷண கனாந்தம் அத்யயனம் செய்து ஸம்பூர்ண கனாந்தம் இவர் ஒருவராக சொல்லபோகிறார்.

ஶ்ரோதாக்கள்:
1. ப்ரம்மஸ்ரீ. சிவசுப்பிரமணிய கனபாடிகள்
2. ப்ரம்மஸ்ரீ பாஸ்கர கனபாடிகள்
3. ப்ரம்மஸ்ரீ கண்ணன் சாஸ்திரிகள்
4. ப்ரம்மஸ்ரீ ஸ்ரீதர கனபாடிகள்

அத்யாபகர்கள்:
1. ப்ரம்மஸ்ரீ நாகராஜ சாஸ்திரிகள்
2. ப்ரம்மஸ்ரீ B.V.ஸூர்யநாராயண கனபாடிகள்
3. ப்ரம்மஸ்ரீ கண்ணன் சாஸ்திரிகள்
4. ஆம்னாய வாசஸ்பதி ப்ரம்மஸ்ரீ G. ஸூர்யநாராயண கனபாடிகள், HYD

உபஶ்ரோதாக்கள்: ருக்வேத கனபாடிகள்

உபன்யாசகர்கள்:
1. மஹாமஹோபாத்யாய முல்லைவாசல் ப்ரம்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்.
2. மஹாமஹோபாத்யாய ப்ரம்மஸ்ரீ மணித்ராவிட் சாஸ்திரிகள்.

மற்றும் வேத பாஷ்ய சாஸ்த்ர வித்வான்கள்.

நிகழ்ச்சி நிரல்

பாராயணம் காலை 7.30 முதல் 11.30 வரை
மதியம் 3.30 முதல் 5.30 வரை

உபன்யாசம் தினமும் சாயங்காலம் 6.30 முதல் 8.00 வரை

தேதி 10.06.24- 21.07.24 (42 Days)
இடம் Sri Sankara Gurukulam (ஸ்ரீ சங்கர குருகுலம்),
8/20, Sir C P Ramaswamy Street, Trust Pakkam
Abhiramapuram, Chennai 600018

பூர்த்தி தினத்தன்று வக்தா (பாராயணம் செய்பவர்) அவர்களை Chariotல் அமர்த்தி ஊர்வலம் நடைபெறும்

சுபம் ராம் ராம்

# ஆனி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| *18-06-2024* | செவ்வாய் | ஸ்வாதி - வேத பாராயணம் - ஏகாதசி |
| *19-06-2024* | புதன் | அனுஷம் தேர் - த்வாதசி - ப்ரதோஷ பூஜை |
| *20-06-2024* | வியாழன் | அனுஷம் - வேத பாராயணம் |
| *21-06-2024* | வெள்ளி | மூலம் - தேர் |
| *22-06-2024* | சனி | மூலம் - வேத பாராயணம் |
| *23-06-2024* | ஞாயிறு | உத்ராடம் - தேர் |
| *24-06-2024* | திங்கள் | உத்ராடம் - வேத பாராயணம் |
| *25-06-2024* | செவ்வாய் | அவிட்டம் - தேர் |
| *26-06-2024* | புதன் | அவிட்டம் - வேத பாராயணம் |
| *02-07-2024* | செவ்வாய் | ஏகாதசி |
| *03-07-2024* | புதன் | த்வாதசி - ப்ரதோஷ பூஜை |

*21-06-2024; 28-06-2024 05-07-2024; 12-07-2024*
வெள்ளிக்கிழமை மாலையில் ஸ்ரீமஹாத்ரிபுரசுந்தரி சமேத
ஸ்ரீசந்த்ரமௌலீஸ்வரருக்கு விசேஷ அபிஷேக பூஜை


உ

ஸ்ரீகாமாக்ஷ்யை நம:

# காஞ்சீபுரத்தில் ஸ்ரீ காமகோடிபீடம்

**ऐश्वर्यमिन्दुमौळेरैकात्म्य प्रकृति का ञ्चिमध्यगतम् ।**
**ऐन्दवकिशोरशेखरमैदंपर्यं चकास्ति निगमानाम् ।।**

மூகபஞ்சசதி-ஆர்யா சதகம்.



வேதங்களின் பரமதாத்பர்யமாய் விளங்கு வது அத்வைத தத்வமே. அத்வைத தத்வத்தின் ஸ்வரூபமே காஞ்சி காமகோடி. காமகோடியே சந்த்ரமௌளீச்வரரின் ஐச்வர்யமாய் விளங்குகிறாள்.

ஸ்ரீகாஞ்சியில் ஸ்ரீ ஆசார்யாளின் ஆஸ்தான பீடமாய் விளங்கும் ஸ்ரீ காமகோடி பீடத்தின் பூர்வ விவரங்கள் அநேக க்ரந்தங்களில் காணப்படுகின்றன.

ஆதியில் காமகோடி என்னும் பராசக்தி காஞ்சியின் மத்தியிலுள்ள ஒரு பிலத்தில் ஆகாச ஸ்வரூபிணியாய், அதாவது ஆகாசத்தையே தனது உருவாகக் கொண்டு, சான்னித்யம் செய்து கொண்டிருந்தாள் என்னும் விவரம் காஞ்சீ மாகாத்ம்யம் 31வது அத்யாயத்திலும் காமாக்ஷி விலாஸம் 11வது அத்யாயத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

## काञ्ची माहात्म्यं (अ.31) (श्लो. 69–81)

काञ्चीपुरं समालोक्य ननन्द कमला मुहुः ।
पंचतीर्थसरस्तीरे भगिन्या भर्तुरिन्दिरा ॥

तपस्स्थानं बिलं सूक्ष्मं परमं व्योम तत्स्मृतम् ।
आधिभौतिकमहोघ्नं नाभिस्थानं भुवः परम् ॥

तदेव ब्रह्मणश्शंभोः शरीरमिति कथ्यते ।
तेनाकाशशरीरं तत् सत्यात्मप्राणनामकम् ॥

तदानन्दमनश्शान्तिसमृद्धममृतं शिवम् ।
उपासते मनस्येवं भूमौ काञ्च्यां यतीश्वराः ॥

स एव विग्रहो देव्याः मूलभूतोऽद्रिराट्भुवः ।
नान्योस्ति विग्रहो देव्याः काञ्च्यां तन्मूलविग्रहः ॥

कामकोटिस्स्मृतस्सोयं कारणादेव चिन्नभः ।
यत्र कामकृतो धर्मः जन्तुना येन केन वा ॥

सकृद्वापि स धर्माणां फलं फलति कोटिशः ।
तेनेदं कामकोटीति बिलद्वारं प्रसिद्धिमत् ॥

उक्तोऽथवा श्रुतः कामः कामेशो धनदः श्रुतः ।
तत्कोटिदा पीठशक्तिः कामकोटिरिति श्रुता ॥

अतः कामः तृतीयोऽत्र पुरुषार्थेषु विश्रुतः ।
तत्परस्तातब श्रुतो मोक्षः कोटिशब्देन शब्दितः ॥

अथ तत्र नृपश्रेष्ठ कामकोष्ठमहीतले ।
सिद्धतीर्थस्य चेशाने तृतीयांशे महाबिलम् ॥

जगत्कामकलाकारं भूमेः कुण्डलिनीपदम् ।
यावन्महाबिलं तत्र तावन्मण्डपतां गतम् ।।

तत्कामनगरं दिव्यं अघघ्नं सर्वसिद्धिदम् ।
तपस्स्थानं बिलं सूक्ष्मं परमं व्योम तत् स्मृतम् ।।

आधिभौतिकमर्माङ्गं नाभिस्थानं भुवः परम् ।
तदेव ब्रह्मणः शंभोः शरीरमिति कथ्यते ।।

लोकानां व्यंङ्ग्यशब्दत्वात् नाभिरित्यभिसंहितम् ।
श्रीपुरस्य त्रिमूर्तीनां ईश्वराणां दिशामपि ।
लोकानां मेरुशैलस्य गोरूपाया(अ)वनेरपि ।।

नवद्वारस्य मार्गं तत् भूयोनिस्तन्महाबिलम् ।
कामकोटिस्स्मृतस्सोयं कारणादेव चिन्नभः ।।

यत्र कामकृतो धर्मो जन्तुना येन केन वा ।
सकृद्वापि सुधर्माणां फलं फफ्रलति कोटिशः ।
तेनेद कामकोटीति बिलद्वारं प्रसिद्धिमत् ।।

காமாக்ஷி விலாசம் 11வது அத்யாயம். பூமிதேவியின் நாபி பிலமே இந்த காம கோடி பிலம். நாபிக்கு ஆபரணமே ஒட்டியாணம், ஒட்டியாணம் என்னும் ஆபரணத்தையே குறிக்கும் காஞ்சி என்ற சொல். ஆகையால் காஞ்சீநகரம் உலகத்திற்கு காஞ்சி என்னும் அணிகலனாய் விளங்குகிறது.

तपस्स्थानं बिलं सूक्ष्मं परमं व्योम तत् स्मृतम् ।
आधिभौतिकमहोघ्नं नाभिस्थानं भुवः परम् ?

காஞ்சீ மாகாத்ம்யம் 31-70

காமாக்ஷி விலாஸம் 11-6.

**जगत्कामकलाकारं नाभिस्थानं भुवः परम् ।**

காமாக்ஷி விலாஸம் 13-73.

**पृथिव्याः गोस्वरूपायाः यत्काञ्चिस्थानतां गतम् ।**

காமாக்ஷி விலாஸம் 1-56.

**अथ क्षितेरद्भुतकाञ्चिमैक्षत ।**

சங்கராப்யுதயம்

நாபியாம் தொப்புள் கொடியின் மூலமாகவே கர்ப்பத்திலிருக்கும் குழந்தை போஷிக்கப்படுகிறது. பூதேவியின் தொப்புளான காஞ்சியினாலேயே உலகம் போஷிக்கப்படுகிறது. காஞ்சியில் விளங்கும் காமாக்ஷியே உலகம் முழுவதும் அன்னமளித்துப் போஷிக்கிறாள். காமகோடி பீடத்தைத் தன் வாஸஸ்தான மாகக் கொண்டு வீற்றிருக்கும் காமாக்ஷித் தாய் எல்லாப் பிராணிகளுக்கும் அன்னமளிக்கிறாள்; என்று காஞ்சீ மாகாத்ம்யம் தெரிவிக்கிறது.

**व्रीहयश्च मयाब्देऽब्दे ते जगत्पोषणेच्छवे ।**<br>
**द्विप्रस्थसंमिता देया जगत्पुष्णातु तैश्चिरम् ।।**

காஞ்சி மாகாத்ம்யம் 45-164

சுந்தரமூர்த்தி நாயனார் காஞ்சியைப்பற்றி பாடின பாட்டில் **உலகுய்யவைத்த காரிரும் பொழிர் கச்சிமூதூர் காமகோட்ட முண்டாக நீர்போய் ஊரிடும் பிச்சை கொள்வதென்னே?** என்கிறார்.

**வாரிருங் குழள்மை வாணெடுங்கண்**<br>
**மலைமகண் மதுவிம்மு கொன்றைத்**<br>
**தாரிருந் தடமார்பு நீங்காத்**<br>
**தையலாளுலகுய்ய வைத்த**<br>
**காரிரும் பொழிற் கச்சிமூதூர்**<br>
**காமகோட்ட முண்டாக நீர்போய்**<br>
**ஊரிடும் பிச்சைகொள் வதென்னே**<br>
**ஓணகாந்தன்றளியுளீரே.**

7 திருமுறை, ஓணகாந்தன் தளி 6. காஞ்சீபுரத்தில் காமகோட்டத்தில் வீற்றிருக்கும் காமாக்ஷி உலக முழுவதும் அன்னமளித்து வருகிறாளே, அப்படியிருக்க நீர் போய் பிச்சையெடுக்க வேண்டிய அவசியமென்ன? என்று கேட்கும் மாதிரியில் சிவபிரானின் பிக்ஷாடன கோலத்தை ஏசுகிறார். சிவபெருமான் பிக்ஷாடனம் செய்ய வேண்டிய அவசியமேயில்லை. அப்படி அவர் பிக்ஷை எடுப்பது வெறும் வேஷமே. அம்பிகையின் அருளினாலேயே சிவபெருமான் ஸகல காரியங்களையும் செய்ய வல்லவராகிறார் என்பதை ஸ்ரீ சங்கர பகவத்பாதாள் ஸௌந்தர்யலஹரியில் முதல் ஸ்லோகத்தில்

**शिवशक्तया युक्तो यदि भवति शक्तः प्रभवितुम्**
**न चेदेवं देवो न खलु कुशलः स्पन्दितुमपि ।**

அம்பிகையுடன் சேர்ந்திருந்தால்தான் சிவபிரானால் இருக்க முடியும். அம்பிகையான சக்தி இல்லாவிட்டால் அவரால் அசையக் கூட முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். பகவத்கீதை14வது அத்தியாயத்தில் கடைசி ச்லோகத்தில் **ब्रह्मणो हि प्रतिष्ठाहं** என்பதற்கு ஸ்ரீசங்கர பகவத்பாதாள் பாஷ்யம் ‘எந்த ஈச்வர சக்தியினால் பக்தர்களுக்கு அனுக்ரஹம் செய்யப்படுகிறதோ (**यया च ईश्वरशक्त्या भक्तानुग्रहादिप्रयोजनाय प्रतिष्ठते प्रवर्तते** அந்த சக்தி கிருஷ்ணபரமாத்மாவாகிய நான் தான் (**सा शक्ति ब्रह्मैवाह** ) , சக்தியும் சக்தியுடையவனும் வேறாயிருக்க முடியாததால் என்று அபிப்பிராயம். **(शक्तिशक्तिमतोः अनन्यत्वात् इत्यभिप्राय)**

**சித்விலாஸீய சங்கர விஜயவிலாஸம்** என்னும் நூலிலிருந்து பிலம் என்னும் குகையில் ஆகாசரூபிணியாயிருந்த பராசக்தியின் ஸாந்நித்யத்தை ஸ்ரீஆசார்ய ஸ்வாமிகள் காமகோடி ஸ்ரீசக்ரபீடமாக தனது திருக்கையாலேயே வரைந்து ஸ்ரீசக்ர உத்தாரணம் செய்தார்களென்றும் அந்த ஸ்ரீசக்ரத்தின் பின்பாகத்தில் ஸ்ரீகாமாக்ஷீ தேவியை பிரதிஷ்டை செய்வித்தார்கள் என்றும், ராஜஸேனன் என்னும் அரசனைக் கொண்டு விஸ்தாரமான தேவாலயத்தை நிறுவினார்கள் என்றும் அறியப்படுகிறது.

**काञ्ची वरदराजस्य राजधानीमवाप सः**
**इयाज वेधा यत्रैव समुद्दिश्यां बुजेक्षणम् ।**
**सोप्याविरासीत् संतुष्टो वपामेवोद्वहन् मुखे**
**पश्यत्सु सर्वदेवेषु यज्ञकुण्डहुताशनात् ।।**

अत्रैकस्यां गुहायां च रुद्रशक्तिरनुत्तमा ।
अभिन्ना ब्रह्मणा चेयं चिन्मात्रैकतनुर्मता ।।

त्रिधा गुणात्मिका चैव निर्गुणा चात्र दृश्यते ।
दिदृक्षतां मुनीनां तु स्वात्मानन्दैकगोचरा ।।

तावुभावपि तत्रत्यौ निरागारौ भृशोज्वलम् ।
निरीक्ष्य देशिकेन्द्रोऽयं उत्सेहे निर्मितुं पुरम् ।।

तत्रत्यो राजसेनोपि राजा राजन्वतीं धराम् ।
कर्तुमेत निशम्याथ वृत्तं देशिकवाञ्छितम् ।।

तत्पुत्रमित्रसेनानी सचिवस्सहबान्धवः ।
शंकराचार्यवर्यस्य जगाहे सविधं मुदा ।।

प्रणम्य शिरसा भूमौ साष्टांगं विनयान्वितः ।
कृतार्थोऽस्मि पवित्रोऽस्मि समुत्तीर्णो भवांबुधेः ।।

स्तुत्वेत्थं देशिकेन्द्राय स्वकीयविभवोचितम् ।
उत्कोचान्सुबहून्दत्वा तस्थौ बद्धाञ्जलिः पुरा ।।

शंकराचार्यवर्योऽथ तद्भक्त्याऽतीव विस्मितः ।
ऊचे वाचमिमां कांचितब विचारणविचक्षणः ।।

महाराज विनीतोसि यशोवानब शौर्यवानसि ।
लक्ष्मीर्यत्र समृद्धाऽऽस्ते मदस्तत्रैव लक्ष्यते ।।

इति गाधा पुराकर्णि त्वयि सा तु मृषाऽभवत् ।
किंचिन्मनीषितं मेऽद्य वर्तते श्रुणु सादरम् ।।

श्रीमान्वरदराजोऽसौ वरदो जगतामपि ।
श्रीकान्तोपि गतात को ह्यनालयकृताश्रयः ।।

सा सर्वमंगलाऽत्रैव कुत्रापि च गुहान्तरे ।
तदर्थमत्र निर्माप्य देवालयमनुत्तमम् ।।

रम्यं पुरं विनिर्माय शृंगाटकसमुज्ज्वलम् ।
सौधप्राकारपरिघवीथिकाभिः विराजितम् ।।

परस्य ब्रह्मणश्शक्तेः कामाक्ष्याश्च महौजसः ।
प्रतिष्ठा करणीयेति तत्र कर्ता त्वमेव हि ।।

इति तद्वचनं श्रुत्वा स राजोत्थाय सत्वरम् ।
यथाज्ञप्तं देशिकेन्द्रैः अद्यैव करवाण्यहम् ।।

दया निक्षिप्यतामीषत् किंकरे मयि देशिक ।
अनेके सन्ति भवतां अन्तेवासिवराः क्षितौ ।।

विहायैतान्कृपा तेऽद्य मय्येव विनिवेश्यताम् ।
इति ब्रुवन्तं राजानं राजसेनमथाऽब्रवीत् ।।

शक्तोऽसि सत्यसन्धोऽसि पुरं कारय सत्वरम् ।
धर्मे विलंबनां कांचितब कर्तुं नार्हसि भूमिप ।।

इत्यादिदेश भूपाय राजसेनाय देशिकः ।
शिरसैव विधृत्वाज्ञां स राजा हर्षसंयुतः ।।

यथोक्तां कारयामास पुरीं लक्षणलक्षिताम् ।
देवालयत्रयं तत्र पृथगेव विनिर्ममे ।।
शिवकाञ्चीति तत्रैकां एकाम्रेशकृताश्रयाम् ।

(சிவகாஞ்சியில் ஏகாம்பரேசுவரர் கோவில்)

नाम्ना तत्रैव कामाक्ष्याः पार्श्वे प्रासादमुन्नतम् ।।

विष्णुकाञ्चीति नाम्नान्यां तोरणादिपरिष्कृताम् ।
श्रीमद्वरदराजस्य सौधमन्यत् समुज्ज्वलम् ।।

(விஷ்ணு காஞ்சியில் வரதராஜர் கோவில்)

एतत्सर्वं विनिर्माप्य दिनैरष्टाभिरिष्टधीः ।
आगत्य तत्र सचिवैः गुरवे विन्यवेदयत् ।।

स्वामिन् गुरो देशिकेन्द्र भवद्भिर्यदुदीरीतम् ।
तत्सर्वं साधितं संयक् स्वयमेव विचार्यताम् ।।

यत्रास्ति किञ्चिद्वैकल्यं क्षम्यतां किंकरस्य मे ।
इत्युक्त्वा पुरतस्स्थित्वा राजसेनो महीपतिः ।।

प्रहर्षमतुलं लेभे देशिकेन्द्रोऽपि मानसे ।
तां सर्वां नगरीं पश्यन् सर्वसंपत्समन्विताम् ।।

कामाक्ष्याः पुरतो देशे श्रीचक्रं स्वयमालिख त् ।

श्रीचक्रपश्चाद्भागे तु कामाक्षीं ज्ञानरूपिणीम् ।
प्रतिष्ठाप्य च पूजायै ब्राह्मणान् विनियुज्य च ।।

एकाम्रेश्वरपूजार्थं विप्रानादिश्य भूयसः ।
श्रीमद्वरदरेंजस्य नमस्याये नियुज्य च ।।

सर्वज्ञपीठमारोढुं उत्सेहे देशिकोत्तमः

சித்விலாஸீய சங்கரவிஜய விலாஸம் அத். 25,7-46

காமாக்ஷி விலாஸத்தை பரிசீலனம் செய்யுங்கால் ஆசார்யாளுக்கு முந்தி ஆதிகாலத்தில் தேவர்களும் முனிவர்களும் பிலாகாசத்தினருகில் செல்லும் போது தமது சரீரத்துக்குள்ளேயே அந்தர்முகமாக ஸ்ரீசக்ரத்தை த்யானம் செய்து அந்த அந்தர் ஸ்ரீசக்ரத்திலேயே தேவியை ஆராதித்து வந்தார்கள் என்று தெரிகிறது.

(தொடரும்)

# நாம ராமாயணம்

இந்த நாம ராமாயணம் 108 வாக்யங்களைக் கொண்டது. ராமாயணம் முழுவதையும் அழகாகக் கோர்த்து எழுதப்பட்டுள்ளது. துளஸீ தாஸரால் எழுதப்பட்டது. அனைவரும் பாராயணம் செய்வது நலம். குழந்தைகளுக்கு ஓதுவித்தல் அதனினும் நலம். தினம் எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களால் பாடப்பட்ட இந்த ஸங்கீர்த்தனத்தை கேட்டல் நலம். ஒவ்வொரு வாக்யத்திற்கும் பின் நான் சரணடைகிறேன் என்று சேர்த்து கொள்ளவும்.

## अरणयका कान्डम्

दण्दकवन जन पालन राम्

दु:ष्टविराध् नाशन राम्

शरभन्ग सुथीक्षण अर्चित राम्

अगस्त्यानुग्रह वर्ह्दित राम्

ग्रुद्राधिप सम्सेवित राम्

पन्चवटीतट् सुस्थित राम्

शूरप्पनाकार्ति विधायक राम्



खर दूषणमुख सीदक राम्

सीताप्रिय हरिणानुग राम्

मारीचार्ति क्रुत आशुग राम्

विनष्टसीताअन्वेष्ण राम्

ग्रुध्रातिप्गतिदायक राम्

शबरीदत्तफलाशन राम्

कबन्ध्बाहुछेदन राम्

**राम राम जय राजा राम् राम राम जय सीथा राम्**

# ஆரண்ய காண்டம்

**தண்டகவன ஜன பாலன ராம்**

*தண்டக வன ஜனங்களைக் காக்கும் ராமனை*

**துஷ்ட விராத வினாசன ராம்**

*விராத அரக்கனை கொன்ற ராமனை*

**சரபங்க ஸுதீக்ஷ்ன அர்ச்சித ராம்**

*சரபங்கர் ஸுதீக்ஷ்ணர் முனிவர்களால் அர்ச்சிக்கப்பட்ட ராமனை*

**அகஸ்த்யானுக்ரஹ வர்த்தித ராம்**

*அகஸ்த்யருடைய அனுக்ரஹத்தால் வளரும் ராமனை*

**க்ருத்ராதிப ஸம்ஸேவித ராம்**

*பறவைகளின் அரசன் ஜடாயுவினால் சேவிக்கப்பட்ட ராமனை*

**பஞ்சவடீதட ஸுஸ்தித ராம்**

*பஞ்சவடியில் வசித்த ராமனை*

**சூர்பனகார்த்தி விதாயக ராம்**

*சூர்ப்பனகைக்கு இன்னல் தந்த ராமனை*

**கரதூஷண முகஸூதக ராம்**

*கர தூஷணர்களை வதம் செய்த ராமனை*

**ஸீதாப்ரிய ஹரிணானுக ராம்**

*ஸீதை விரும்பிய மானைப் பின் தொடர்ந்த ராமனை*

**மாரீசார்தி க்ருதாசுக ராம்**

*மாரீசனுக்கு இன்னல் விளைவித்த ராமனை*

**விநஷ்ட ஸீதான்வேஷக ராம்**

*தொலைந்து போன ஸீதையை தேடிய ராமனை*

**க்ருத்ராதிப கதி தாயக ராம்**

*புள்ளரசன் ஜடாயுவிற்கு மோக்ஷம் அளித்த ராமனை*

**சபரீ தத்த பலாசன ராம்**

*சபரி தந்த பழங்களை உண்ட ராமனை*

**கபந்த பாஹுச்சேதன ராம்**

*கபந்தனின் கைகளை வெட்டி எறிந்த ராமனை*

**ராம ராம ஜய ராஜா ராம் ராம ராம ஜய ஸீதா ராம்**



# அத்வைத ஆச்சார்ய பரம்பரை 20

# ஸர்வஞ்ஞாத்மர்

ஸ்ரீஆதிசங்கர பகவத் பாதரால் ஸந்யாஸ தீக்ஷை அளிக்கப்பட்டவராய் தனக்குப் பின் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் முதல் பீடாதிபதியாக நியமிக்கப்பட்டவர். எப்போதும் மனனசீலராக இருந்ததால் இவர் ஸர்வக்ஞாத்ம முனி என்று அழைக்கப்பட்டார். மிகச்சிறிய வயதிலேயே முதிர்ந்த ஞானம் பெற்றவராக இருந்த இவரை இனம் கண்டு பீடாதிபதியாக்கிய பெருமை பகவத்பாதரையே சாரும். 'ப்ரத்யக்ஷாவகமம் தர்ம்யம்' என்ற கீதாசார்யனின் வாக்கிற்கிணங்க அங்கையிற் நெல்லிக் கனி போல் அனைவரும் அறிந்து, அடிப்படை தர்மத்திலிருந்து மாறுபடாதது அத்வைத சித்தாந்தம் என்பதை அனுபவத்தில் உணரலாம். 'ஸம்க்ஷேப சாரீரகம்' என்றொரு அற்புதமான நூலை அருளியுள்ளார். இது ஆசார்யாளால் அருளப்பட்ட ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்யத்தின் ஸாரத்தை விளக்க வந்த நூல். இந்நூலுக்கு ஸ்ரீராம தீர்த்தர், ஸ்ரீ மதுஸூதன ஸரஸ்வதி முதலானோர் உட்பட எழுதிய எட்டு உரைகள் உள்ளன. 'ஸம்க்ஷேப ஸாரீரகம்' தவிர **'பஞ்ச ப்ரக்ரியா', 'ப்ரமாண லக்ஷணா'** என்ற இரு நூல்கள் இவர் எழுதியுள்ளார்.

ஸ்ரீ ஸர்வஞ்ஞாத்மர் தாம்ரபரணி நதிக்கரையில் அமைந்துள்ள 'ப்ரம்ம தேசம்' என்ற சிற்றூரைச் சேர்ந்தவர். மஹாதேவன் என்ற இயற்பெயருடைய இவர் ஸ்ரீ சங்கர திக்விஜய காலத்தில் அவரால் கவரப்பட்டு ஆட்கொள்ளப்பட்டவர். ஸ்ரீ ஸுரேஸ்வராச்சாரியாருடன் இணைந்து 70 வருடங்களும் பின் தனித்து 40 வருடங்களும் ஸ்ரீ காமகோடி பீடத்தை அலங்கரித்தவர்.

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் முதல் பீடாதிபதியாக பிரகாசித்தது மட்டுமன்றி அத்வைத சித்தாந்தத்தின் முதன்மைப் பிரசாரகராகவும் இவர் விளங்குகிறார். அத்வைத சித்தாந்தத்தை ஆணித்தரமாக வாதிட்டு நிறுவிய பூர்வாச்சார்யர்கள் பூர்வாச்சார்யர்கள் ஸ்ரீ பத்மபாதர், ஸ்ரீ ஸுரேஸ்வரர், ஸ்ரீ வாசஸ்பதி மிஸ்ரர் ஆகிய மூவரோடு இணைத்து நான்காவதாக இவர் கருதப்படுவதே இவரது பெருமைக்குச் சான்று.

ஸ்ரீ சங்கரரின் ஸூத்ர பாஷ்ய உரையில் காணப்படும், முரண்படுவது போல் தோன்றும் வாக்யங்களை விளக்கி முரண்பாடில்லை என்று காட்டுவது இவரது சாஸ்த்ர ஞானத்திற்கும் அனுபவ ஞானத்திற்கும் எடுத்துக் காட்டாக அமைகிறது. பிரம்மத்தை

நேர்மறையான பத்து வார்த்தைகள் மூலமே முடியும் என்று சொல்ல எடுத்துக் காட்டுகிறார். நித்ய:, ஸுத்த:, புத்த:, முக்த:, ஸத்ய:, ஸூக்ஷ்ம:, ஸத், விபு:, அத்விதீய:, ஆனந்த: என்ற பதங்களால் மட்டுமே பிரம்மத்தைக் குறிக்க முடியும். எதிர்மறையாகக் குறிக்கக் கணக்கற்ற சொற்கள் இருக்கின்றன.

தாம்ரபரணீ நதி தீரத்தில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பிரம்மதேசம் என்ற சிற்றூரில் வந்தனாசார்யர் என்பவரின் குமாரராக தோன்றியவர் ஸ்ரீ ஸர்வக்ஞாத்மர். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்ற மூதுரைக்கு இணங்க மிகச்சிறிய வயதிலேயே வேதங்கள், சாஸ்திரங்கள் அனைத்தும் கற்று அறிவுஜீவியாக விளங்கினார். பகவத்பாதர் ஸ்ரீ காஞ்சியில் காமகோடி பீடம் நிறுவி ஸர்வக்ஞ பீடம் ஆரோஹணம் செய்வதற்கு முன் வாதத்திற்கு வந்த அனைவரையும் வென்றார். அது சமயம் பிரம்ம தேசத்திலிருந்து ஏழு வயது பாலகனாக மஹாதேவன் வந்தார். இவரது தந்தையும் பூர்வ மீமாம்ஸையில் சிறந்த வித்தகர். தந்தையோடு சேர்ந்து வாதிட்டு வாதத்திறமையில் குமாரனும் தேர்ச்சி பெற்றிருந்தான். ஸ்ரீ சங்கரருடன் வாதிட விரும்பினான். ஸ்ரீ சங்கரரிடம் வாதத்தில் தோற்றான். ஆனால் ஞான தானத்தில், குரு கடாக்ஷத்தில் வென்றான். ஸ்ரீ சங்கர கிங்கரனாக ஆனான். ஆசார்யாளிடம் ப்ரேம பக்தி பெருகிற்று. துறவறம் யாசித்தான் மஹாதேவன். பகவத்பாதர் ஸந்யாஸ தீக்ஷை அருளி, ஞானோபதேசம் செய்து ஞான குருவாக்கினார். ஸர்வக்ஞபீடம் ஏறிய ஸர்வக்ஞர் ஆத்மார்த்தமான பிரிய சிஷ்யனுக்கு ஸ்ரீ ஸர்வக்ஞாத்மர் என்று நாமகரணம் சூட்டி ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதியாக இருக்கப் பணித்தார். ஞான வைராக்யங்களில் பூரணத்துவம் பெற்றிருந்த ஸ்ரீ ஸர்வக்ஞாத்மர் குருவின் கட்டளையை சிரமேற்கொண்டு பீடாதிபதியானார்.

இன்றும் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தில் நடைபெறும் வியாஸ பூஜையில் விசேஷ ஸ்தானம் கொடுத்துப் பூஜிக்கப்படுகிறார் ஸ்ரீ ஸர்வஜ்ஞாத்மர். ஐந்து ஐந்து பஞ்சகங்களாக ஆறு பஞ்சகங்களுக்கு ஆசார்யாவரணம் செய்து **'த்ரவிடாசார்ய பஞ்சகம்'** என்பதில் **'ஸம்க்ஷேப யாரீரகாசார்யர்'** என்று பெயர் கொடுத்து இன்றும் இவர் பூஜிக்கப்படுகிறார். நள வருடம் வைசாக மாதம் கிருஷ்ணபக்ஷ சதுர்தசியன்று இவர் விதேஹ முக்தியடைந்ததாக கருதப்படுகிறது. ஸ்ரீ அத்வைத ஆசார்ய பரம்பரையில் அடுத்து வருபவர் கற்றோரும் மற்றோரும் போற்றித் திகழ்ந்த ஸ்ரீ வாசஸ்பதி மிஸ்ரர்.

(வளரும்)

# சாணக்ய ஸுபாஷிதம்

**குபுத்ரன்**

**கிம் தயா க்ரியதே தேன்வா யா ந தோக்த்ரீ ந கர்பிணீ**

**கோ அர்த: புத்ரேண ஜாதேன யோ ந வித்வான் ந பக்திமான் ॥**

*பாலும் ஈனாத சினையும், ஆகாத பசுவினால் என்ன பயன்? அது போல் படிப்புமில்லாத, பக்தியுமில்லாத பிள்ளையால் என்ன பயன்?*

**முட்டாள்**

**மூர்க்கச்சிராயுஷ: புத்ராத் புத்ரோ ஜாதம்ருதோ வர:**

**ம்ருதஸ்து சால்பதுக்காய யாவஜ்ஜீவம் ஜடோ தஹேத் ॥**

*நூறு வயது முட்டாள் புத்ரனைவிட பிறந்தவுடன் இறக்கும் குழவி இனிது. இந்த துக்கம் சிறிது காலம் தான். முட்டாள்களால் வாழ் நாளும் இன்னல்தான்.*

**சுடும்**

**குக்ராம வாஸ: குல ஹீன சேவா கு போஜனம் க்ரோதமுகீ பார்யா**

**புத்ரச்ச மூர்க்கோ விதவா ச கன்யா வினாக்னினா ஷ்ட் ப்ரதஹந்தி காயம் ॥**

*குக்கிராமத்தில் இருப்பு, குல ஹீன ஸேவை, அசுத்த உணவு, சிடு மூஞ்சி மனைவி, முட்டாள் புத்ரன், விதவையான பெண் இவை ஆறும் அக்னி இல்லாமலே ஒருவனை சுடும்.*

**அடிமை**

**க்ருஹாஸக்தஸ்ய நோ வித்யா ந யா மாம்ஸபோஜின:**

**த்ரவ்யலுப்தஸ்ய நோ ஸத்யம் ந ஸ்த்ரைணஸ்ய பவித்ரதா ॥**

*வீட்டிலேயே இருப்பவனுக்கு கல்வி வராது. ஊனுண்ணுபவனுக்கு தயை வராது. பணப் பேராசை பிடித்தவனுக்கு ஸத்யம் வராது. பெண் வழி சேர்ந்தவனுக்கு தூய்மை வராது.*

**சத்ருக்கள்**

**ருணகர்தா பிதா சத்ரு மாதா ச வ்யபிசாரிணீ**

**பார்யா ரூபவதீ சத்ரு: புத்ர: சத்ரு; அபண்டித: ॥**

*கடன் வைத்த பிதா சத்ரு, விபசாரி தாய் சத்ரு, பேரழகியான மனைவி சத்ரு அபண்டிதனான புத்ரன் சத்ரு.*

**இன்னல் தருபவர்கள்**

**மூர்க்கசிஷ்ய உபதேசேன துஷ்டஸ்த்ரீ பரணேன ச**

**துக்கிதை: ஸம்ப்ரயோகேன பண்டிதோபி அவஸீததி ॥**

*முட்டாள் சிஷ்யனுக்கு உபதேசம், துஷ்ட ஸ்த்ரீயைக் காத்தல், அழுமூஞ்சிகளுடன் சகவாஸம் இவை பண்டிதனையும் கீழே வீழ்த்தி விடும்.*

**எதிரி**

**லுப்தானாம் யாசகள் சத்ரு: மூர்க்கானாம் போதகோ ரிபு:**

**ஜாரஸ்த்ரீனாம் பதி; சத்ரு:சோராணாம் சந்த்ரமா ரிபு: ॥**

*கஞ்சனுக்கு யாசகன் எதிரி, மூர்க்கனுக்கு உபதேசிப்பவன் எதிரி, கள்ளபுருஷிக்கு பதி எதிரி, திருடர்களுக்கு நிலவு எதிரி.*

**விஷம்**

**துஷ்டா பார்யா சடம் மித்ரம் ப்ருத்யச்ச உத்தரதாயக:**

**ஸஸர்பே ச க்ருஹே வாஸோ ம்ருத்யுரேவ ந சம்ஸய: ॥**

*துஷ்டையான மனைவி, ஏமாற்றும் நண்பன், எதிர்த்துப் பேசும் வேலையாள், பாம்புடன் வாஸம் இவையே சாவுக்கு இணை.*

**கேலி**

**வ்ருத்தகாலே ம்ருதா பார்யா பந்துஹஸ்த கதம் தனம்**

**போஜனம் ச பராதீனம் திஸ்ர : பும்ஸாம் விடம்பனா ॥**

*வயதான காலத்தில் மனைவி மரணம், பந்துவின் கையில் போய்விட்ட தனம், பரான்ன போஜனம் இவை மூன்றும் ஒருவனுக்கு கேலியாகும்.*

*(தொடரும்)*

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

ஆர். விஸ்வநாதன்



எனக்கு ஸ்வாமிமலையில் நிலம் உண்டு . அதைப் பார்க்க அடிக்கடிச் செல்வேன். அப்படி ஒரு நாள் அங்கு சென்று திரும்பும்போது ஸ்வாமிகள் கும்பகோணம் வந்திருப்பதை அறிந்தேன். பெரும் கூட்டம். அப்போது அவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். நான் 4 முழ வேஷ்டி கட்டிக் கொண்டிருந்தேன். பெரியவா குல வழக்கப்படி இருக்க வேண்டும் என்பவராகாயால் அவரை தர்சிக்காமல் வீடு திரும்பினேன். என் தாயாரிடம் பெரியவா வந்திருப்பதைச் சொன்னேன். நான் தர்சனம் செய்யவில்லை என்றால் மனம் வருந்துவார்கள். ஆகையால் கூட்டம் அதிகம் அதனால் ப்ரஸாதம் வாங்க முடியவில்லை என்றேன்.

என் பெற்றோர்கள் உடனே கும்பகோணம் சென்றார்கள். பெரியவா தர்சனத்தின் போது நான் வந்ததையும் கூட்டம் அதிகம், அதனால் ப்ரசாதம் வாங்க முடியவில்லை என்று என் தாயார் சொன்னபோது' அவன் பஞ்சகச்சம் கட்டிக் கொள்ள வில்லை. அதனால் கிட்ட வரவில்லை என்று தான் நினைத்ததாக என் பெற்றோர்களிடம் அவர் சொன்ன போது அவரது தெய்வாம்சம் தெரிந்தது.

ஒரு சமயம் அவர் தங்கியிருந்த ஊரில் தர்சிக்கச் சென்றிருந்தேன். இருட்டிவிட்டது. காலையில்தான் தர்சனம். அப்போது ஒரு ப்ரமுகர் என்னைப் பார்த்து எங்கே தங்கப்

போகிறீர்கள் என்று கேட்டார். ஏதேனும் ஒரு வீட்டுத் திண்ணையில் படுப்பேன் என்றேன். அவர் என்னுடைய காரை பெரியவா தங்கியிருக்கும் இடத்திற்கு அருகில்தான் நிறுத்தியுள்ளேன். நீங்கள் பின் சீட்டில் படுத்துக்கொள்ளுங்கள் என்றார். நானும் சுகமாகக் காரில் தூங்கினேன். விடியற்காலை விழித்தபோது ரோஜாப்பூ மணம். பெரியவா அருகிலுள்ள திண்ணையில் அமர்ந்திருந்தார்கள்.

அப்போது அந்த ப்ரமுகர் என்னிடம் நீங்கள் படுத்துக் கொண்டிருந்த சீட்டை எடுத்து விட்டு அதன் கீழேயுள்ள மூட்டைகளை பெரியவா முன் வையுங்கள் என்றார். நானும் அப்படியே செய்தேன். அப்போது அந்த ப்ரமுகர் தட்டுத்தட்டாக இருந்த ரோஜாப்பூக்களுடன் மூட்டைகளிலிருந்து நாணயங்களை பெரியவாளிடம் ஸமர்ப்பித்தார். ஸ்ரீ பெரியவா அவர்களுக்குப் ப்ரஸாதம் தந்துவிட்டு அவர் வீட்டின் பூஜை அறையிலுள்ள ஸ்வாமியை நமஸ்காரம் செய்து விட்டு வரச்சொன்னார்கள். பெரியவா என்னிடம் இந்த பண மூட்டைகளை எடுத்த இடத்திலேயே வைத்து விட்டு வரச் சொன்னார்கள். நானும் அப்படியே செய்தபின் என்னிடம் 'இந்தப் பணம் அந்த ப்ரமுகர் பொய் சாக்ஷி சொன்னதற்கு வந்த பணம். மடத்திற்கு இப்படிப் பட்ட பணம் வேண்டாம் என்றார்கள். பக்தி மட்டுமல்லாமல் நாணயத்தையும் ஒழுக்கத்தையும் பெரியவா போற்றினார் , மேலும் கடைபிடிக்கவும் செய்தார் என்பதைப் பார்க்கும் போது 'இவர் தெய்வம்' என்று தெரியும்.

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின்
சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும்
சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது
கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்

# கடவுள் வழிபாடு ஏன்?



இப்பொழுது எங்கே பார்த்தாலும் எல்லாரும் பலவகைத் துன்பங்களை அநுபவித்து வருவதற்குக் காரணம் கடவுள் வழிபாடு இல்லாததேயாகும். கடவுள் இருக்கிறார் என்ற உணர்வு இன்மையால் பல கெட்ட காரியங்கள் செய்ய இடம் ஏற்படுகிறது. உடலில் உயிர் தங்குவதற்கு உணவு கொள்வதும், நீர் பருகுவதும், மலஜலங்களைக் கழிப்பதும் அவசியம். செய்ய வேண்டியிருப்பது போல உயிர் கடைத்தேறக் கடவுள் வழிபாடும் அவசியம். மனித சரீரத்தை எடுத்த ஒவ்வொருவரும் தினம் தவறாமல் வீட்டில் இருந்து கொண்டே கோயிலுக்குச் சென்றோ கடவுளை வழிபட வேண்டியது மிகமிக அவசியம். அந்த சமயத்திலாவது மனத்தைத் தெய்வ உருவத்தில் நிலைநிற்கச் செய்ய வேண்டும் அப்படிச் செய்யாவிட்டால், தெய்வ வழிபாடு இல்லாவிட்டால், பிறவி வீணாகும் '**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு**' என்ற தமிழ் வேதப்படி நன்றிகொன்ற பெரும் பாவத்துக்கு உள்ளாவோம் இந்தக் கருத்தை ஒட்டியே ஔவையும் 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று உலக நீதியிலேயே கூறியுள்ளார். ஆகையால் கடவுளை வழிபட வேண்டியது மிக அவசியம்.

**கடவுள் என்பவர் யார்?**

உலகத்தை ஒரு சக்தி படைத்துக் காத்து அழித்து வருகிறது. நமக்கு அனுபவமாகத் தெரிந்த விஷயமே. பத்து மாதங்கள் தாயின் வயிற்றில் ஒருவித ஆபத்தும் இல்லாமல் குழந்தை இருக்கிறது. பிறகு பூமியில் பிறக்கிறது உண்ணும் உணவு ஜீர்ணமாக்கப்பட்டு உடலில் சேருகிறது; உடல் வளர்கிற பிறகு ஒரு நாள் இந்த உடல்

அழிந்து போகிறது. இவ்வாறு ஆவதெல்லா அந்தச் சக்தியால்தான். அந்தச் சக்திக்குத்தான் கடவுள் என்று பெயர்.

**கடவுளை ஏன் வணங்க வேண்டும்?**

கடவுள் எல்லா உலகங்களுக்கும், எல்லாப் பொருள்களுக்கும் தலைவராவார். அவர் நமக்குப் பல அவயவங்களைக் கொடுத்திருக்கிறார். உணவு முதலியவற்றைப் படைத்திருக்கிறார். அன்புடன் நம்மைக் காப்பாற்றுகிறார். அவர்களை உண்மையுடன் வழிபட்டால்தான் நம்மீது அவர் கருணை ஏற்படும். கருணையினால்தான் நாம் எல்லா வகை சுகதுக்கங்களினின்றும் விடுபட்டு அழியாத ஆனந்த நிலையை அடையலாம். பிறவிப் பெருங்கடலைத் தாண்டி பேரின்பத்தை அடையலாம்.

**கடவுளுக்கு வடிவம் உண்டா?**

கடவுளுக்கு உண்மையில் வடிவம் கிடையாது. உண்டு என்று கொள்வதாயினும் இன்ன வடிவந்தான் என்று சொல்ல முடியாது. அவரை உருவத்திலும் வழிபடலாம். விநாயகர், முருகன், சிவன், விஷ்ணு, பார்வதி, சரஸ்வதி, ராமர், கிருஷ்ணன் வழிபாடெல்லாம் அவர் வழிபாடே. எப்போதும் ஓர் உருவத்தை மாறி மாறி நினைத்துக் கொண்டே இருக்கும். ஒரு விநாடியாவது மனம் நினையாமல் இராது. ஒவ்வொருவருக்கும் அன்பு ஏற்பட நம் முன்னோர்கள் கடவுளுக்கு ஓர் உருவம் கொடுத்தனர். அந்த உருவம் நாம் நினைக்க நினைக்க, கடவுள் ஞாபகம் உண்டாகும். நாளடைவில் பழக்கத்தினால் அவர் எங்கும் எல்லா உயிர்களிடமும் இருப்பதாகக் காணலாம். இதை ஒட்டியே ஞான சம்பந்தரும் அருளியுள்ளார் :-

**இன்ன உரு இன்ன நிறம் என்றறிவதேல் அரிதுநீதி பலவும்**
**தன்ன உருவம் மென மிகுத்தவன் நீதியொடு தானமர்விடம்**
**முன்னைவினை போய் வகையினால் முழுதுணர்ந்து முயல்கின்ற முனிவர்**
**மன்ன இருபோது மருவித்தொழுது சேரும் வயல் வைகாவிலே.**

இதன் பொருள் :-(பெருமானது வடிவம் ) இன்ன வடிவம் இன்ன நிறம் என்று ஆராய்ந்தறிவதாயின் அது முடியாது. நீதிகள் பலவும் தனது வடிவமாகும் என்னும்படி மேம்பட்டவனான அப்பெருமான் முறைப்படி அமர்ந்துள்ள இடம்; பழைய பாவங்கள் நீங்கப்பெற்று முறைப்படி முற்றும் அறிந்த, முயலும் தவமுனிவர்கள் இரண்டு வேளைகளிலும் மிகுதியாக வந்து சேர்ந்து வணங்கித் தியானித்தற்கு இடமானதும்,

வயல் சூழ்ந்ததுமான திருவைகாவூரே ஆகும். நம்மாழ்வார் திருவாய்மொழி இது: -

**அவரவர் தமதமது அறிவு அறிவகைவகை**
**அவரவர் இறையவர் என அடி அடைவர்கள்**
**அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்**
**அவரவர் விதிவழி அடைய நின்றனரே.**

இதன் பொருள்: அவரவர் தமது தமது அறிவுகளுக்குத் தோன்றிய வகைப்படியே அந்த அந்தத் தெய்வ வடிவங்களை இறையவர் எனப் பணிவார்கள். அவரவர் தெய்வங்கள் குறைவுடையவரே அல்லர். ஓர் இறைவரே அவருடைய விதிப்படியே நின்று அருள் புரிகிறார்.

**கோயில் கட்டியதன் நோக்கம்**

உலகத்தில் பரம ஏழை முதல் பெரிய பணக்காரர் வரை எல்லாருக்கும் பல தொந்தரவுகள் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. நிம்மதியே நிலைத் திருப்பதில்லை. எல்லாருக்கும் பக்தியும் நிம்மதியும் ஏற்படவே நமது முன்னோர் கோயில்களைக் கட்டினார்கள். பூமியில் தண்ணீர் எங்கும் பரவியிருந்தாலும் அந்தத் தண்ணீரை உபயோகப்படுத்த ஒரு கிணறு அவசியம். இல்லாவிட்டால் தண்ணீரைப் பருக முடியாது. அதுபோல, எங்கும் வியாபகமாக உள்ள கடவுளை ஒரு குறிப்பிட்ட இடமாகிய கோயிலில் இருப்பதாக அமைத்துக் கொண்டால் உண்மையில் வழிபட முடியும். கொஞ்ச நாளைக்கு அம்மாதிரி செய்தால், நாளடைவில் கடவுள் எங்கும் பரவியிருப்பது விளங்கும். இதைத்தான் 'மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினோர்க்கு வார்த்தை சொல்லி ஸத்குருவும் வாய்க்கும் பராபரமே என்று கூறியுள்ளார்.

**விக்கிரகம் வைத்தது எதற்கு ?**

கடவுளிடம் முதலில் அன்பு ஏற்பட விக்கிரக வழிபாடு மிகவும் அவசியம். பசுவின் உடல் முழுவதும் இரத்தம் இருந்தாலும், பால் வெளிவருவது மடியிலிருந்துதான். அதுபோலவே கடவுளன்பு வெளிப்படுதல் விக்கிரக வழிபாட்டின் மூலமாகவே. வெளி உலகத்திலேயே எப்போதும் உலாவிக் கொண்டிருக்கும் நம் மனத்தை அடக்கி, அதற்கு ஓர் உருவத்தைக் கொடுத்து வழியாகச் செய்தால் சிறிது நேரமாவது அந்த உருவத்தை நினைத்துக் கொண்டிருக்கும். கடவுளுக்கு உருவம் ஆணாகவோ பெண்ணாகவோ கொடுக்கலாம். கிடைக்கப் பெறாதவர்கள் படங்களை வைத்து வழிபடலாம்.

### கோயிலுக்குள் செல்லும் விதம்

உடலை நன்றாகச் சுத்தம் செய்து கொண்டு நெற்றியில் அவரவர்கள் மதச் சின்னங்களை (விபூதி அல்லது திருமண்) அணிந்து பரிசுத்தமான ஆடையுடன் கோயிலின் உள்ளே போக வேண்டும். கால்களைக் கழுவிக்கொண்டு உள்ளே போகும்போது கடவுள் துதிகளைச் சொல்லிக் கொண்டே செல்ல வேண்டும். மனத்தினை வெளியே போகாதபடி தடுத்துச் செல்ல வேண்டும். மூக்குச் சிந்துதல், வெற்றிலை போட்டுக் கொள்ளல், எச்சில் துப்புதல் கூடாது. உள்ளே சென்று, கொடிமரத்தின் பக்கத்தில் நின்றுகொண்டு, ஆண்களாக இருப்பின் அஷ்டாங்கமும் (தலை, 2 காதுகள், 2 கைகள், 2 தோள்கள், மோவாய்க்கட்டை முதலியவை) பூமியில் படும்படியும், பெண்களாயின் பஞ்சாங்கமும் (தலை, 2 கைகள், 2 முழங் கால்கள்) பூமியில் படும்படியும் நமஸ்கரிக்க வேண்டும். பிறகு கோயிலைச் சுற்றி, துதிகளைச் செய்துகொண்டு மெதுவாக வலம் வரவேண்டும்.

### திருவிழாக்கள் எதற்காக?

சிலர் கோயிலுக்குச் சென்று கடவுளை வழிபடச் சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள். சிலர் வீட்டை விட்டு வெளியே புறப்பட்டு வர முடியாதவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் எல்லாரும், எல்லா ஜாதியாரும் கடவுளை வழிபடுவ தற்காகவே பிரதோஷம், கிருத்திகை, ஏகாதசி முதலிய விசேஷ நாள்களில் உத்ஸவ மூர்த்தியின் புறப்பாடு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும், சிறு கிராமங்களிலுள்ள கோயில்களில் உத்ஸவங்களைக் கொண்டாடுவதற்குப் போதிய உதவிகள் இருப்பதில்லை. அதற்காகப் பக்கத்திலுள்ள பாடல் பெற்ற தலங்களில் திருவிழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. அவற்றில் கடவுள் வழிபாட்டைப்பற்றிய சொற்பொழிவுகளும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. ஸத்காலக்ஷேபங்களும் இன்னிசைக் கச்சேரியும் நிகழ்த்தப்படுகின்றன. இவற்றைக் கேட்பதற்காக ஜனங்கள் திரண்டு வருகின்றனர். அப்பொழுது கடவுளின் உத்ஸவமூர்த்தியையும் கண்டு பக்தி கொள்வார்கள். ஆகையால் யாவரும் மனம், வாக்கு, காயம் இம் மூன்றினாலும் கடவுள் வழிபாட்டைச் செய்து பேரின்பத்தை அடைய முயல வேண்டும்.

# ஆழ்வார்கள் சரித்ரம்

குலசேகர ஆழ்வார், தொண்டரடிப்பொடி



108 திவ்ய தேசங்கள் நாடு முழுவதும் உள்ளன. பொதுவாக சோழ, பாண்டிய தேசங்கள் மாதிரி சேர தேசம் ப்ரபலமில்லை. எம்பெருமான் சேர (கேரளம்) தேசத்திலேயும் பல தலங்களில் அருள் பாலிக்கின்றான். அந்தக் கேரளத்தில் திருவஞ்சைக் களம் என்னும் ஊரில் த்ருடவ்ரதன் என்னும் மன்னனுக்கு மகனாய் பிறந்தார். ராஜ பரம்பரை. கல்வி கேள்வி, யுத்த முறைகள் அறிந்தவர். திறம்பட ஆட்சி செய்தவர். எம்பெருமானிடம் அளவற்ற பக்தி.

ராமாவதாரம், க்ருஷ்ணாவதாரம் இரண்டிலும் மனதை பறிகொடுத்தவர். ராமாயண ப்ரவசனத்தை நாள்தோறும் அரசவையில் ஏற்பாடு செய்து வந்தார். ஒரு நாள் உபன்யாஸகர் ஆரண்யகாண்டத்தில் பதினாங்காயிரம் போர்வீரர்களுடன் ராமன் ஒருவனே போர் செய்து கொண்டிருந்தான் என்று கூறும்போது 'இதோ நான் ராமனுக்குத் துணையாகப் போகிறேன் என்று வாளை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டார். உபன்யாஸகர் பயந்துபோய் அத்தனை வீரர்களையும் ராமன் வெற்றி கொண்டான் என்று அவசரமாகக் கூறி முடித்தார். அதற்குப் பிறகுதான் ஆழ்வார் சமாதானமடைத்தார்.

ஒரு நாள் ராவணன் சீதையை அபகரித்தான் என்பதைக் கேட்டு 'இதோ நான் போய் சீதையை மீட்டு வருவேன் என்று கூறி கடலில் குதித்தார். அவரது பக்தியை மெச்சிய எம்பெருமான் அவருக்குக் காக்ஷி அளித்தார். ராமனுடைய இன்ப துன்பங்களை தன்னுடையவே என்று எண்ணினார். அதனால் 'பெருமாள்' என்று அழைக்கப்பட்டார். திருமாலடியார்களைக் கண்டால் திருமாலைக் கண்டது போன்று உவகை கொண்டு அவர்களை ஆதரித்து வந்தார். ஆழ்வாருக்கு ஸ்ரீரங்கம் சென்று எம்பெருமானை தரிசனம் செய்ய வேண்டும் என்பது அவா. மந்த்ரிகளுக்கு அவர் அங்கு சென்று விட்டால் வரவே மாட்டார் என்பது எண்ணம். அதைத் தடுக்க அவர்கள் ஒரு சூழ்ச்சி செய்தனர். திருமாலின் அடியவர்களுக்கு அன்னம் அளிப்பது முதல் கடமை, அதனால்

*அதை முதலில் செய்ய அவரைத் தூண்டினர். அவரும் தன் ப்ரயாணத்தைத் தள்ளிப்போட்டார். இப்படி பல காலம் நடந்தது. அடியவர்கள் அவர் அரண்மனையில் எங்கும் செல்லும் சுதந்திரம் இருந்தது.*

*இதைப் பொறுக்காத சிலர் ஒரடியார் மீது பழி சுமத்தினர். உண்மை வெளி வந்ததும் ஆழ்வார் மனம் வருந்தினார். அரச வாழ்க்கையை வெறுத்தார். தன் மகனிடம் அரசாட்சியை ஒப்படைத்துவிட்டு ஸ்ரீ ரங்கம் சென்றார்.*

*அங்கே கோவிலின் மூன்றாம் ப்ரகாரத்தை அரணாகக் கட்டினார். அது இப்போதும் குலசேகரன் வீதி என்று அழைக்கப்படுகிறது. திருவேங்கடம் தில்லை நகர், சித்தர்கூடம், திரு வித்துவகோடு, அயோத்தி முதலிய க்ஷேத்ரங்களுக்குச் சென்று பாடிவந்தார். அவரது பாடல்கள் 'பெரியதிருமொழி' என்று தொகுக்கப்பட்டுள்ளது.*

*'தசரதன் புலம்பல்', ராமனுக்குத் தாலாட்டு இவை சிறப்பு வாய்ந்தவை. அவர் ஸம்ஸ்க்ருதத்தில் எழுதிய ''முகுந்த மாலை' ப்ரசித்தி பெற்றது சில பாடல்கள்*

**'செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே**
**நெடியானே வேங்கடவா நின் கோயிலின் வாசலில்**
**அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்து இயங்கும்**
**படியாய் கிடந்து உன் பவளவாய் காண்பேனே'**

**'நின்னையே தான் வேண்டி நீள் செல்வம் வேண்டாதான்**
**தன்னையே தான் வேண்டும் செல்வம் போல் மாயத்தால்**
**மின்னையே சேர்திகிரி வித்துவக் கோட்டம்மானே**
**நின்னையே தான் வேண்டி நிற்பன் அடியேனே.**

*(பெருமாள் திருமொழி)*

**'நமாமி நாராயண பாதபங்கஜம் கரோமி நாராயணபூஜனம் ஸதா**
**வதாமி நாராயண நாம் நிர்மலம் ஸ்மராமி நாராயண தத்வம் அவ்யயம்'**

*(முகுந்த மாலை)*

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

*।। ஓம் ச்ரத்தாபக்தித்யானவிதே வேதாந்தபாஸ்கராய நம: ।।*

**ச்ரத்தா ச த்யானயோகச்ச பக்திச்ச ஸாதனம் விது: ।**

**ப்ரஹ்மாத்மஜ்ஞானஸம்ப்ராப்த்யை நூனம் வேதாந்தபாஸ்கர: ।।**

பிரம்மஜ்ஞானத்தை அடைவதற்கு, சிரத்தை, பக்தி மற்றும் தியான யோகம் முதலானவைகள் ஸாதனங்களாக இருக்கின்றன.

## 27. பிரம்மவித்யைக்கான பயிற்சிகள்

**ச்ரத்தா பக்தி த்யானயோகாத் அவேஹி! ।**

**கைவல்யோபநிஷத் 1-2**

*தத்துவத்தை அறியும் ஆவல் உள்ளவன் சிரத்தை, பக்தி மற்றும் தியான யோகத்தினால் பிரம்மத்தை அறியவேண்டும்.*

ஆத்மனை அறிவதற்கு சிரத்தை, பக்தி, தியான யோகங்கள் என்ற மூன்று பயற்சிகளைச் சொல்லி இருக்கிறது.


**சிரத்தை :** ஸத்குருவிடமும், சாஸ்த்திரங்களிலும் இருக்கக் கூடிய நம்பிக்கையே சிரத்தை. குருவின் உபதேசத்திலும், வேதாந்த சாஸ்திரங்களிலும், பூரணமான நம்பிக்கை, ஆதரவு, அன்பு, இருக்க வேண்டும்.

**பக்தி:** பரமாத்மனிடத்திலும், ஸத்குருவிடத்திலும் அதிகமான கௌரவம் பக்தி இருக்க வேண்டும். குருசேவை மற்றும் குருபக்தியானது ஞானம் கிடைப்பதற்கு முக்கியமான ஸாதனைகளாம்.

**தியானயோகம் :** சித்தசுத்தியினால் மட்டுமே ஆத்ம ஞானம் ஏற்படும், கல்வி அறிவால் அல்ல. மனதை உள்முகமாக செலுத்தி ஆத்மாவைத் தியானிப்பதே தியானயோகம். இத்தகைய மூன்று சாதனைகளினால் பிரம்மத்தை அறிந்து முழுமையடைந்தவன் ஆகவேண்டும்.

।। ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ।।

# ஸ்ரீ ராம ஸம்பந்தம்



தலைப்பு யாரோ ஒருவருடைய பெயர் போன்று தோன்றும். ஆனால் இருவருடைய பெயர்கள் அவர்கள் வாழ்வில் நடந்த ஒத்த ஸம்பவத்தால் இணைத்துள்ளேன். இருவரும் அவதார புருஷர்கள். ஒருவர் த்ரேதாயுகத்தில் இருந்தவர். இன்னொருவர் கலியுகத்தில் இருந்தவர். ஒருவர் விஷ்ணுவின் அவதாரம். ராமபிரான். இன்னொருவர் ஸ்கந்தனின் அவதாரம் ஞான ஸம்பந்தர். ராமபிரான் தர்மத்தையும் ஸத்யத்தையும் நடத்திக் காட்டினவர். ஸம்பந்தர் பக்தி வழியை மக்களுக்கு நடத்திக் காட்டினவர். பெரிய ஸம்பந்தம் எதுவும் காணோமே என்று தோன்றும். இக்கட்டுரையின் நோக்கம் இருவர் வாழ்விலும் நடந்த ஒரே மாதிரியான நிகழ்ச்சி. மற்றும் ராமாயணத்தின் உத்தர காண்டம் ஆதார பூர்வமானது என்பது. இப்போது அந்த நிகழ்ச்சி எப்படி இருவர் வாழ்விலும் நிகழ்ந்தது. அதன் ஒப்புமை என்னவென்று பார்ப்போம். இருவரின் இறுதி யாத்திரை எப்படி மேன்மையுற்றது என்பதையும் பார்ப்போம்.

முதலில் ராமாவதாரம் உத்தரகாண்டம்.

லக்ஷ்மணன் துர்வாசரின் சாபப்படி தேஹ வியோகம் அடைந்து மேலுலகம் போக ராமபிரான் லவ குசர்களுக்கு நாட்டைக் கொடுத்தபின் அங்கிருக்கும் அனைவரையும் தன்னுடன் ஸ்வர்க்கம் வர பணிக்கிறார். இதை பாடுகிறார் நம்மாழ்வார்.

**‘கற்பார் இராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ**
**புல் பா முதலா புல் எறும்பு ஆதி ஒன்று இன்றியே**
**நல் பால் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்**
**நல் பாலுக்கு உய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே’**

பொருள் : நான்முகன் படைத்த உலகில் வாழும் அசையும் அசையா பொருள்கள் ஆகிய பல உயிர்களையும் புல், பூண்டு முதலாக எறும்பு போன்ற அனைத்து உயிர்களையும் தன் அருளால் தன்னுடன் ஸ்வர்கம் வர முக்தி தந்தனன். ஆதலால் ராமன் புகழ் அன்றி வேறு ஒன்றை கற்பரோ இதற்கு ஆதாரம் தேடினேன். இறுதியில் உத்தரகாண்டத்தில் விரிவாக இந்நிகழ்ச்சி பேசப்படுகிறது. அதையும் பார்ப்போம்.

'ராமபிரான் பல ஆணைகளை இட்டுவிட்டு அங்கிருந்தவர்களிடம் நீங்கள் விரும்பியபடி என்னுடன் வரலாம் என்றார்'. இறுதி யாத்திரைக்கு வேண்டிய சடங்குகளை வசிஷ்டர் செய்து முடிக்க ராமர் நுண் ஆடை அணிந்தவராய் இரு கைகளிலும் குசம் என்னும் தர்மத்தை ஏந்திக் கொண்டு வேத மந்தர்ங்களை உச்சரித்துக் கொண்டு ஸரயு நதிக்கரைக்குச் சென்றார். அச்சமயத்தில் வேத மந்த்ரங்களைத் தவிர வேறு எதுவும் பேசவில்லை. நடப்பதைத் தவிர வேறு எதையும் செய்யவில்லை. உலக சுகத்தைத் துறந்து ப்ரகாசமான சூர்யனைப் போன்று போனார். அவருடைய வலப்புறத்தில் ஸ்ரீதேவியும் இடப்புறத்தில் பூதேவியும் முன்னால் அழிவு சக்தியும் சென்றார்கள். பலவகையான அம்புகள், விற்கள், ஆயுதங்கள் எல்லாம் ஆண் உருவேற்று அவரைப் பின் தொடர்ந்தனர். முனிவர்கள் வேத வித்துக்கள் அவருடன் சென்றனர்.

பெண்மணிகள், வயோதிக மாந்தர்கள், யுவதிகள், வேலைக்காரர்கள், அலிகள் மற்றும் பணியாளர்கள் அவரைத் தொடர்ந்து சென்றனர். சத்ருக்னன், பரதனுடன் மனைவிகளுடன் அக்னி ஹோத்ரத்தை எடுத்துச் சென்றான். எல்லா அமைச்சர்களும், பணியாளர்களும் தத்தம் புதல்வர்களுடன் மிக்க மகிழ்ச்சியோடு ராமபிரானைப் பின்தொடர்ந்தனர். அக்கூட்டத்தில் ராமனால் வசீகரிக்கப்பட்ட ப்ராணிகளும் பறவை விலங்கு வாகனங்கள் பாவங்கள் அற்றவராய் மனக் களிப்புடன் ராமரை பின் தொடர்ந்தனர்.

வானரர்கள் அனைவரும் நீராடிவிட்டு கில கில சப்ததுடன் ராமரை பிந்தொடர்ந்தனர். கரடிகளும் தொடர்ந்தன. அயோத்தியில் கண்களுக்குப் புலப்படாத பூதங்களும், ராம யாத்ரையில் கலந்து கொண்டன. சராசர ப்ராணிகள் எவையெவை ராமன் செல்வதைப் பார்த்தனவோ அவைகளும் ராம யாத்திரையில் கலந்து கொண்டன. அப்போது அயோத்தியில் மூச்சு விட்டுக் கொண்டிருக்கும் சிறு ப்ராணிகள் எதுவுமில்லை. விலங்கினங்களும் அவருடன் சென்றுவிட்டன.

உத்தர காண்டம் 109 ஆம் ஸர்கம்

(தொடரும்)

# ப்ரபோத சிந்தாமணி

*ஸ்ரீ எஸ். ராமசந்திர ஐயர்*

## 5. முரட்டுக் குதிரைகள்

மனிதராகிய நமக்கு இறைவன் பத்து இந்திரியங்களை அருளியுள்ளார். கண், காது, மூக்கு, நாக்கு, சருமம் என்ற ஐந்து ஞானேந்திரியங்களும், வாக்கு, கை, கால், வாயு, உபஸ்தை ஆகிய ஐந்து கர்மேந்திரியங்களும் ஆகிய இந்த பத்து இந்திரியங்களாலும் மனிதன் எல்லா சுக துக்கங்களையும் அனுபவிக்கிறான்.

உபநிஷத்துக்களில் இந்த இந்திரியங்கள் முரட்டுக் குதிரைகள் **(துஷ்டாச்வா இவ ஸாரதே:)** என்று வர்ணிக்கப்படுகின்றன. ரதம் நன்றாக இருக்கலாம், சாரதியும் புத்திசாலியாக இருக்கலாம், வீதியும் நன்றாக இருக்கலாம். ஆனால் குதிரைகள் அடங்காததும், முரட்டுத்தனம் உடையனவாகவும் இருந்தால் பயணம் செய்பவர்களுக்கு அபாயம் ஏற்படலாம். எச்சரிக்கை!

நம் இந்திரியங்களும் முரட்டுக் குதிரைகள் போன்று இருக்கின்றன. குதிரைக்குக் கடிவாளம் எத்தனை அவசியமோ, அதைப் போல் இந்திரியங்களுக்கு விவேகம் அவசியம். கடிவாளமில்லாத குதிரைகள் ரதத்தையும், சவாரி செய்பவரையும் பள்ளத்தில் தள்ளி விட்டு விடுகின்றன. அது போல் குருவின் மார்க்க தரிசனமும், விவேக விசாரமும் இல்லாவிட்டால் இந்திரியங்கள் நம்மைத் துக்கக் கடலில் வீழ்த்தி விடுகின்றன.

மனிதர்களாகிய நாம் கடவுள் நமக்குக் கொடுத்துள்ள விவேக சாமர்த்தியத்தையும், சரி-தவறு என்று ஆராயக்கூடிய அறிவையும் சரியான வழியில் உபயோகப்படுத்த வேண்டும். அப்பொழுது தான் இந்திரியங்களை நல்வழிப் படுத்த முடியும்.

பழக்கிய குதிரைகளினால் தான் நம் பிரயாணம் பாதுகாப்பானதாகிறது. அவ்வாறே விவேக சாமர்த்தியத்தால் பழக்கிய இந்திரியங்கள் நம் வாழ்க்கையையும் சுகமானதாக மாற்றுகின்றன. ஸத் விசாரம், பகவத் பக்தி, சாத்வீக சிந்தனை, ஸத் சங்கம், வேதாந்த சிந்தனைகள் முதலான சாதனைகளினால் நாம் இந்த முரட்டு இந்திரியங்களை நல்ல வழியில் செலுத்துவோமாக! சாத்வீக இந்திரியங்களால் சாசுவதமான சுகம் கிடைக்கும். விவேகத்தால் செம்மைப்படுத்தப்பட்ட இந்திரியங்களால் நாமும் இராம ராஜ்ஜியத்தை ஏற்படுத்தலாம்.

# மூக ஸாரம்

இராமாயணம் ஸ்ரீநிவாஸன்

காஞ்சீ மடத்தை அலங்கரித்த ஸ்ரீ மூக கவியினால் இயற்றப்பட்ட மூக பஞ்சசதியை எல்லாரும் அறிவர். காமாக்ஷியின் புகழை பல விதமாக அதில் கவி கூறியிருப்பார் புலமை சிறந்த கற்பனை வளம், உயர்ந்த பக்தி இலக்கியமாக மிளிர்கிறது மூக பஞ்சசதி. அந்த ஐநூறு ஸ்லோகங்களிலிருந்து சில முக்யமான ஸ்லோகங்களை 'மூக ஸாரம்' என்னும் தலைப்பில் மறைந்த ஸ்ரீ ராமாயணம் ஸ்ரீநிவாசன் தொகுத்து அருளியுள்ளார். பொருள் உணர்ந்து பாராயணம் செய்வோம்.

**कवित्वश्रीमिश्रीकरन निपुणौ रक्षणचणौ**
**विपन्नानाम् श्रीमन् नलिनमसृणौ शोणकिरणौ ।**
**मुनीन्द्राणाम् अन्त; करण शरणौ मन्द सरणौ**
**मनोग्यौ कामाक्ष्याया: दुरितहरणौ नौमि चरणौ ।।**

கவித்வஸ்ரீமிஸ்ரீகரண நிபுணௌ ரக்ஷணசணௌ
விபன்னானாம் ஸ்ரீமன் நலினமஸ்ருணௌ ஸோனகிரணௌ
முனீந்த்ராணாம் அந்த:கரண ஸரணௌ மந்த ஸரணௌ
மனோக்யௌ காமாக்ஷ்யா: துரிதஹரணௌ நௌமி சரணௌ ।।

கவித்வஸ்ரீயை கூட்டி வைக்கும் நிபுணமுள்ளவையும், துன்பமுற்றவர்களை காப்பாற்றும் திறமையுள்ளவையும், அழகிய தாமரை போல் எழிலுடையவையும், சிவந்த கானியுடையவையும், முனிவர்களின் அந்தகரணங்களை இருப்பிடமாய் உடையவையும், மென்னாடையை உடையவையும், மனத்திற்கு இன்பம் தருபவையும், பாபங்களை அழிப்பவையுமான காமாக்ஷியின் சரணங்களை நமஸ்கரிக்கிறேன்.

*(தொடரும்)*